# தமிழர் தகவல்

## Tamils' Information

செப்டம்பர் 2004
இலண்டன்



<u>செப்டம்பர் 15 – 26</u>

*நிலத்தைக் காக்க*
*நீரும் மறுத்தாய்*
*நெருப்பாய் ஒளிரும் நீதான்*
*எங்கள் சுவாசக் காற்றில் எங்கும் !*

மாத சோதிடம்
உள்ளே !

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


# THARANI JEWELLERY

54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ

Tel : 020 8902 7111, 020 8902 6777

நவநாகரீக தங்க நகைகளுக்கு

**தாரணி ஜுவல்லரி**






76, Tooting High Street, London SW17 0RN Tel: 020 8767 5333 Fax: 020 8767 5814

இலண்டன் நேரக் கணிப்பு !
வாக்கிய பஞ்சாங்க தொகுப்பு
விசேட நாட்களும், விழாக்களும்
திருமணங்களும், தெளிவான வாக்கும் தெரிந்திட

**சிவசக்தி காலண்டர் – 2005**

உங்கள் இல்லங்களில் ஒளிர்விட உதவும்
முன்கூட்டியே பதிவு செய்க !

– சிவயோகம்
இலண்டன்



LONDON

ஸ்ரீ சிவசக்தி வாக்கிய கலண்டர்

26

சனி SATURDAY

பார்த்திப வருஷம்
கார்த்திகை
11

07:42 AM → 03:52 PM
09:44 AM → 10:46 AM
12:48 PM → 01:49 PM
11:39 AM → 11:55 AM
11:27 PM → 01:10 AM

தமிழீழ விடுதலை போராட்ட தலைவர்
வே. பிரபாகரன் பிறந்த தினம்.

NOVEMBER 2005

இன்றே முந்துங்கள் !
பயனடையுங்கள் !
கடந்த ஏழு ஆண்டுகளாக
வெளிவருகிறது !
இலண்டன் முறையில்
வாக்கிய பஞ்சாங்க
அடிப்படையில் சீராக
அமைக்கப்பட்டது.

ஸ்ரீசக்தி நாட்காட்டி
சிவயோகம்
180-186 Upper
Tooting Road,
Tooting, London
SW17 7EJ
Tel : 020 8767 9881
Fax : 020 8767 2337

# தமிழர் தகவல் Tamils' Information

செப்டம்பர் 2004 | மலர் : 02 | இதழ் : 15


'' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.'' – குறள்

## 'வலி'யும் 'வலிமை'யும்

இப்போது இலங்கையில் பேச்சு வார்த்தை மேசை தூசி படிந்திருக்கின்றது. காலத்தை கடத்துவதும், அடிக்கடி குரலை மாற்றி, நீட்டி முழங்குவதும், அரற்றுவதும், தூற்றுவதும் பின் அரவணைப்பதுமாக காலத்தை நீட்டி கருத்துக்களை மறக்கப் பண்ணும் பழைய வழியைத்தான் அரசு தன் பணியாகக் கொண்டிருக்கிறது. பலம் பெற்ற நிலையில் நின்றுதான் படியிறங்கிப் பேச வந்தோம். உலகாயத ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் அவர்களை ஒருவழிக்குக் கொண்டு வரும் என்றுதான் நம்பினோம். நடப்பது வேறாகி நிற்கிறது. நினைப்பு எல்லாம் எப்படி நிதி தேடுவது என்பதைத் தவிர நிலைமையை சீர் செய்ய வேண்டுமென்பதல்ல. இது உலக நாடுகளுக்கு இன்னும் புரியவில்லையா ?

நாம் கேட்பது நமது மண் பற்றித்தான். மாற்றானின் ஒரு அங்குல நிலம் கூட நமக்குத் தேவையில்லை என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. ஆயினும் சிங்கள அரசியல் கட்சிகள் ஆரம்ப கால அறிவுடனேயே இயங்கி வருகின்றன, இருப்பை உறுதிப் படுத்துகின்றன. இது யார் பெற்ற சாபமோ ? அரை நூற்றாண்டுகளுக்கு மேல் அதே கதைதான். தங்கள் இராணுவத்துக்கு ஆட்கள் தேவைப்பட்டபோதெல்லாம் கோழைகளாய் கோடிகளுக்குள் குளிர் காய்ந்தவர்கள் இன்று பதவி என்ற சுகங்களை விட முடியாமல் தங்களை ஒரு தனித்துவமிக்க வீரர்களாய் பறைசாற்றுகிறார்கள். இவர்கள் கத்தல் பேச்சுகளும், கழுத்தறுப்புகளும் அப்பாவிச் சிங்கள மக்களை எப்பாடுபட்டாவது திசை திருப்பலாம் என்பதுதான். இப்படித் திரும்பும் திசையில் போர் வெறியைக் கூட்டி இன்னும் சில நாட்கள் பிழைப்பு நடத்தலாம். இவர்கள் என்றைக்குமே கேள்விக்குறிதான். இவர்களது கடந்த காலங்கள் ஆட்டமும், கூட்டமும், ஆயுதங்களை இழந்த போராட்டமும், கொலையும் கொள்ளைகளும் நிறைந்தவைதான் என்பது எமக்கு நன்றாகவே தெரியும். இவர்கள் கொள்ளையடித்த பொது மக்களின் பொன் ஆபரணங்கள் எத்தனை டன்கள் திறைசேரியில் உள்ளன ? இவர்கள் செய்த 4776 உயிர்க்கொலை; பேராசிரியர்கள், டாக்டர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், வணிகர்கள் என்று சமுதாயத்தின் வேர்களையே அறுத்தெறிந்ததை மக்கள் இவ்வளவு சீக்கிரம் மறந்து விட்டமை நாட்டின் சாபக்கேடுதான். வழக்கமாக கத்திக்கத்தியே வறட்டு வேதாந்தம் பேசியே மக்களை எத்துணை சுலபமாக ஏமாற்றி வருகிறார்கள் என்பதை எண்ணும்போது பாவம் சிங்கள மக்கள் என்று பரிதாபப்பட வேண்டியுள்ளது. இவர்களது கூச்சலுக்கு அச்சப்பட்டு ஆட்சியின் தலைவியே தன் கூட்டணித் தலைமையை உதறிவிட்டமைதான் இப்போது அரசியல்வாதிகளையும், வெளிநாட்டினரையும் வியக்க வைத்திருக்கிறது. இந்த அதிர்வுகள் இலங்கை அரசியிலில் எதையும் சாதிக்கமுடியாத ஒரு சரிவைத் தந்திருக்கின்றன. இந்தச் சரிவு தன் இனத்தைத் திருப்திப்படுத்தவா ? தன் சகபாடிகளுக்குப் பயந்தா ? அல்லது இதுவும் ராஜதந்திரம் என்ற எண்ணமா ? எதுவென்பது இன்னும் சில நாட்களில் புரிந்து போகும். எரி தணலை ஊதுவதை விட்டால் அது கரியாவதை காணவேண்டியதுதான். காலத்தின் மாற்றம் அதுதான்.

நிதியற்ற நிலை, படிப்படியாக படியேற்றம் காணும் விலைவாசிகள் நான்கு மாத கால ஆட்சியில் மூன்று முறை அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வுகள், எதையும் தீர்க்கமாகத் தீர்மானிக்க முடியாத கூட்டணி. கொள்கைகள் இடையேயான குளறுபடிகள். தன் பெரும் பான்மையை ஜனநாயக ரீதியில் இதுவரை சபையில் நிரூபிக்க முடியாமை, வேலை நிறுத்தங்கள் இப்படித் திணறல் தினம் தினம் கூடிக்கொண்டேப் போகிறது. இந்த நிலையில் சமாதானம் பற்றி என்ன பேசப்போகிறார்கள். நமக்குத் தெரியவில்லை. சிவப்பு சட்டைக் காரர்கள் பேசுவது அவர்களுக்கே புரியவில்லை. '' ''சமாதானத்தின் எதிரிகள் யார் '' என்று போஸ்டர் போட்டுத் தங்களைத் தாங்களே தேடுகிறார்கள். இவர்கள் எதிர்பார்ப்பு என்ன ? ' பிஸ்மார்க் ' கேட்டதுபோல் இரத்தத்தையும், இரும்பையுமா ? தெளிவாகச் சொல்லவேண்டும். ஏனெனில் நாம் எதையும் எதிர்கொள்ள ஆயத்தமானவர்கள் என்பதை அகிலம் முழுதும் அறியும்.

ஒரு காலத்தில் ' வலி 'தான் தமிழனுக்கு இருந்தது. வாடியதும், வதங்கியதும், மண்ணை இழந்ததும், வாழ்வை இழந்ததும் தமிழன்தான். விடிந்ததும், இருண்டதும் அறியாமல் புலம் பெயர்ந்த நாடுகளில் தங்களை வேலை பளுவில் புதைத்துக்கொண்டிருந்து விடிவுக்காய் காத்திருப்பது எல்லாம் தமிழன்தான். இலங்கையில் இருந்து வாழ்விடத்தை இழந்து வந்தவன் தமிழன் மாத்திரமே. மற்றையவர்கள் ' வாழும் ' சுகம் தேடி வந்தவர்கள்தான். பொய்யான கூற்றுகள் மூலம் புகலிடம் தேடிக்கொண்டாலும், அந்த சுகம்தான் அவர்கள் தேடி வந்த இலக்கு – அது தமிழனுக்கில்லை. எந்தப் பெரும்பான்மைக் கட்சித் தலைமைகளும் தமிழனுக்காக இரக்கப்பட்டு பேச்சு மேசைக்கு வரவில்லை. இது நமக்குப் புரியாதது அல்ல. களத்தில் பெற்ற ' அடி 'யே கதைக்க வேண்டிய கட்டாயத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது. உள்நோக்கம் தமிழனை எப்படி அழிப்பது என்பதுதானே தவிர அணைப்பது அல்ல. கருணா பிரச்சனையில் சிங்கள கட்சிகள் அணைத்தும் அதனை நிரூபித்துக் காட்டியிருந்தன. அவர்களது வலிக்கு மருந்தாக இப்போ நமது '' வலிமை ''யை இழக்கப்பண்ணப் பார்க்கிறார்கள். என்பதை இனியும் புரியாதவன் தமிழனல்ல. ' வலி 'யை நாம் பெற்றிருந்தபோது அவர்கள் மகிழ்ந்திருந்தார்கள். தங்கள் ' வலிமையை ' நம்பியிருந்தார்கள். இன்று நாம் ' வலிமை ' பெற்றிருக்கும்போது அவர்களுக்கு ' வலி ' வந்திருக்கிறது. விடை காண வேண்டிய கட்டாயம் அவர்களுக்கானது. காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

அயல் நாட்டின் விடுதலைப் போராளி ஒருவனைப் பார்த்து '' இயக்கத்தின் வலிமை குறைவடையத் தொடங்கியதால் பேச்சு வார்த்தைக்கு இறங்கி வந்தீர்களா ? '' என ஒரு நிருபர் கேட்டார். அதற்கு அந்தப் போராளி இப்படிப் பதில் சொன்னான்; '' வலிமை என்பது ஆயுதங்களோ, ஆட்களின் எண்ணிக்கையோ கிடையாது. கொள்கையின் பலம்தான் ஒரு இயக்கத்தின் பலம் '' என. ஈழத் தமிழனுக்கும் இதற்குரிய விடை தெரியும்.

ஆசிரியர்

தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்


முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :

020 8480 3320



வெளியீடு :

திருமுருகன் அறிவகம்
இலண்டன்

Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :

அரவிந்தன்

Editor :

Aravindan

வங்கி :

H.S.B.C
A/C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A/C No.: 81437100

கணணி, அச்சுப்பதிப்பு :

தமிழர் தகவல்

Computering & Printing :

Thamizhar Thagaval

£ 6.00 தபாற் செலவை
மேற்படி வங்கியில்
செலுத்தின்
வருடம் முழுவதும்
'' **தமிழர் தகவல்** ''
உங்கள்
இல்லம்தேடி வரும்



படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே


**வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !**

## வறுமையுள் செம்மை

அமெரிக்காவில் இறந்த தனது அம்மாவின் நினைவாக மகன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபலமான இந்து ஆலயத்தில் பூஜை செய்வித்தார். பின்னர் அங்கு வரிசையிர் அமர்ந்திருந்த பிச்சைக்காரர்களுக்கு தானம் வழங்கினார்.

அப்போது இரு பிச்சைக்காரர்களுக்கிடையில் ஒரு இடைவெளியில் தட்டு மாத்திரம் காணப்பட்டது. அதற்குரிய பிச்சைக்காரியைக் காணவில்லை. '' அவர் வெளியே போய் விட்டார், இப்போது வருவார் '' என்று இன்னொரு பிச்சைக்காரி தெரிவித்தபோது; '' இந்தப் பணத்தை அவரிடம் கொடுத்து விடுங்கள் '' என்று அவளிடம் பத்து ரூபாத்தாளைக் கொடுத்தார்.

இவர் அங்கு நடமாடிக் கொண்டிருந்தபோது ஒரு பிச்சைக்காரி அவரிடம் வந்து '' எனக்குரிய தர்மத்தை நீங்கள் தரவில்லையே '' என்று சொன்னதும் இவர் அந்தப் பெண்ணிடம் பத்துப் ரூபாத்தாளைக் கொடுத்தார்.

சற்று நேரத்தில் அந்தப் பிச்சைக்காரப் பெண் ஓடோடி வந்து '' ஐயா '' எனக்குரிய தர்மத்தை நீங்கள் ஒருவரிடம் கொடுத்திருந்தீங்க, அவள் என்னிடம் கொடுத்தாள். ஆகவே நீங்கள் என்னிடம் தந்த பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறிய வண்ணம் பத்து ரூபாத்தாளை நீட்டினாள்.

இந்தக் கனவானுக்கு கண்கள் கலங்கிவிட்டன. பிச்சைக் காரர்களிடம் இவ்வளவு நாணயம், நேர்மை, கண்ணியம் இருக்கிறதா என வியந்தார்.

'' அம்மா இந்தப் பணத்தையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் '' என்று சொல்லிவிட்டு நெகிழ்ந்த இதயத்துடன் நடந்தார்.

(நன்றி: டீயார், தினக்குரல்)

## புதிய அக்கறை !

'' யாழ்ப்பாணம் முதல் மன்னார் வரை ஆன கடற்படுகையில் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள பெட்ரோலிய வளங்கள் 2006 ஆம் ஆண்டு முதல் அகழ்வு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எரிபொருட் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குச் சிறந்த வழியாக இது அமையும் என இனங்கண்டு பெட்ரோலிய அகழ்வு நடவடிக்கைகளுக்கான தனியானதொரு செயலகத்தை மின்சக்தி எரிபொருள் அமைச்சு விரைவில் ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளது. சுமார் 100 முதல் 150 கோடி அமெரிக்க டொலர்கள் இப்பெட்ரோலிய ஆய்வுக்கான கிணறு ஒன்றை அமைப்பதற்குச் செலவாகுவதால் இப்பணியை இலகுவில் மேற்கொள்ள முடியாதுள்ளது.எனினும் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பிக்க முடியுமென அறியமுடிகிறது ''

(நன்றி: யாழ் – உதயன்)

## ஒரு வஞ்சப் புகழ்ச்சி !

'' பிரபாகரன் உண்மையிலேயே திறமைசாலி. ஆனால் அத்திறமைகள் அனைத்தும் பிழையான காரியங்களுக்கு காட்டுக்குள் புதையுண்டு போகின்றன. இது மிகவும் கவலையான விடயம். எனவே ஜனநாயக நீரோட்டத்துக்கு வரவேண்டும். அப்போது பிரபாகரனை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். பாதுகாப்பை வழங்கி அவரது திறமைகளை நாட்டின் நலனுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் ''

(நன்றி: உடுவே தர்மாலோக தேரர் பேட்டியிலிருந்து

## ஒரு நீலிக்கண்ணீர் !

'' தமது அரசாங்கம் பதவி யிலிருந்திருந்தால் இவர்கள் வடிக்கின்ற நீலிக்கண்ணீருக்கான காரணங்களுக்கும் இவர்கள் எழுப்புகின்ற கேள்விகட்கும் முடியும் என்பது போன்ற மாயை ஒன்றை ஐக்கிய தேசிய கட்சி மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றது.

அதன் சிரேஷ்ட உறுப்பினர்களான பேராசிரியர் பீரிஸ் , ரவி, கருணாநாயக்க, மலிக் சமர விக்கிரம, கரு ஜெயசூர்யா ஆகியோர் ஊடகங்களின் முன்னாள் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி தற்போது வெளியிடுகின்ற கருத்துகளுக்கும் அது குறித்து ஜனாதிபதியை கண்டிக்கிற அல்லது விமர்சிக்கின்ற வார்த்தை ஜாலங்களுக்கும் ஒருவகையில் முக்கியத்துவம் கொடுத்தாலும் இவர்களுடைய அரசாங்கத்தில், அவர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. இதுகுறித்து கடந்த பொது தேர்தலின் போது இடம்பெற்ற பிரசாரங்களில் கூட ஐக்கிய தேசியக்கட்சி எதிர் கொண்ட கண்டனங்கள், விமர்சனங்கள் இன்னும் காதில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. அந்த ஈரம் மாறுவதற்கிடையில் இவர்கள் தற்போது நீலிக்கண்ணீர் வடிக்கின்ற உள்நோக்கம் என்ன ? ''

(நன்றி: ஈழ முரசு)

## மதமாற்றம் பற்றி

'' மதமாற்றம் என்பது தனி மனித மனமாற்றத்தால் நடப்பது. மிக சிறிய அளவிலேயே. மதப்பூசல்களும், போர்களும் அரசர்களை கைக்குள் போடுவதற்கான அரண்மனைச் சூழ்ச்சிகளும், அரச அதிகார வலிமையும், பணவலிமையும், மத மாற்றத்துக்கு பெரும் பங்களித்திருக்கின்றன. ஒடுக்கு முறைக்கு எதிரான மறுப்புக் குரலாகவும் மதமாற்றம் செயற் பட்டுள்ளது. எவ்வாறாயினும் அடிப்படையான சமுதாய மாற்றம் நிகழாமல் மதமாற்றத்தின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களுடைய விடுதலை நிகழவில்லை. மதமாற்றம் சில சமூகப் பிரிவினரது பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளது. ஆனால் சமூக ஏற்றத்தாழ்வுகள் மாறவில்லை. மதமாற்றம் புதிய ஏற்றத் தாழ்வுகளுக்கும், சமூகப் பகைமைக்குமே வசதி செய்து கொடுத்துள்ளது.

இலங்கையில் மதமாற்றம் பற்றிய கண்டனத்தில் தமது பங்கை செலுத்திவருகின்ற இலங்கை அரசாங்கமும், பௌத்த மதத் தலைவர்களும் மேலை நாடுகளில் பௌத்த மதப் பிரசாரத்தை முக்கியமாக மேற்கொள்வது பற்றி அண்மையில் ஒரு தகவல் வெளியானது. ஒரு அரசாங்கம் தமது மண்ணிலோ அயல் மண்ணிலோ குறிப்பிட்ட ஒரு மதத்துக்கான பிரசாரத்திற்கு வெளிப்படையாக ஆதரவு அளிக்குமானால், மாற்று மதங்களது முயற்சிகளைக் கண்டிக்க அதற்கு என்ன தகுதியுள்ளது ? ''

(நன்றி: 'மறுபக்கம் ', கோகர்ணன், தினக்குரல்)

வெம்பிளி, ரூட்டிங்கில்

# GLOBAL

## EXCHANGE LTD

Money Transfer to Sri Lanka

# குளோபல்

எக்சேஞ்ச் லிமிடெட்

உலகத்தின் எப்பாகத்திற்கும்
பணம் அனுப்ப
நம்பிக்கையான நிறுவனம்

**54, Ealing Road, Wembley**
**Middlesex HA0 4TQ**
**Tel : 020 8902 3366**
**1081, Garrat Lane, Tooting**
**London SW 17 OLN**

வோல்த்தம்ஸ்ரோவில்

# Shree Jewellers



வைரத்தாலிக்கொடிகள், சங்கிலிகள், காப்புகள்,
தோடுகள், மோதிரங்கள், நவரத்தினங்கள்,
நெக்லஸ்கள், மகரப்பதக்கங்கள்

ஸ்ரீ ஜுவல்லர்ஸ்

வாரத்தின் ஏழு நாட்களும்
கடை திறந்திருக்கும் சாத்திர
விதிப்படி, பொருத்தமான நவரத்தின
கற்கள் பதித்து மோதிரம், பென்ரன்,
தோடு செய்து தரப்படும்

**110, Hoe Street**
**Walthomstow**
**London E17 4QS**
**Tel : 020 8509 7588**

வோல்த்தம்ஸ்ரோவில்



# KUMARANS

குமரன்ஸ்

TEXTILES

**136, Hoe Street Walthamstow**
**London E17 4QR**
**Tel : 020 8521 3444, 8530 3033**
**Fax : 020 8521 9444**

ரூட்டிங்கில்

# Yhaal House

சுத்தம், சுவை, தரம் மிக்க இலங்கை, இந்திய உணவு வகைகளை
எந்நேரத்திலும் எவ்வளவு தேவையாயினும்
குறைந்த விலையில் குன்றாத
மனநிறைவுடன் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



**1, London Road, Tooting**
**London SW17 9JP**
**Tel : 020 8767 8585**

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

# Prime Food & Wine

**News Papers & Magazines, Off Licence - Grocery**
**Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables**



மனங்கவரும் மளிகைச்சாமான்கள்,
மென்பானங்கள், மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி என
எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப் பெற
எம்மை நாடுங்கள்

**118, Tooting High Street,**
**London SW 17 0RR**
**Tel : 020 8682 3777**

539 A வெம்பிளியில்

# ANGLO ASIAN CASH & CARRY

ENGLISH - ASIAN & AFRO CARIBBEAN GROCERY
FROZEN FOOD - FRUIT & VEG

TEL 020 8900 0444 அங்லோ ஏசியன் தமிழ்க்கடை TEL 020 8900 966

**ANGLO ASIAN CASH & CARRY**
373, Church Lane
Kingsbury NW9 8JB
Tel : 020 8200 1555 Mob : 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
539, High Road , Wembley HAO 2DN
Tel : 020 8900 0444 Fax : 020 8900 9666
Mob : 07956 425 707 web :www.angloasiangroup.uk

## ANGLO ASIAN

LONDON-COLOMBO COLOMBO-LONDON

Those willing to send parcels from Colombo to London and from London to Colombo by Air or by Sea are requested to contact us for such services at reduced Rates

**ANGLO ASIAN MINI MART**
***513, High Road,***
***Wembley HAO 2DN***
Tel : 020 8900 2451 Fax : 020 8903 8202
Mob : 07956 425 707

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### கனவு !

பூவிரியும் போதினிலே
வண்டினங்கள் கவிபொழியும்!
தாவிவிடும் மலையருவி
கவிபொழியும் சோலைதோறும்
கூவிநின்று பூங்குயில்கள்
கவிபொழியும் தமிழ் நாட்டில்...
கோவிலிலே மணியொலியும்
கவிபொழியும்......போதாதோ?
ஆவியொன்று தந்தெனையும்
அருந்தமிழில் கவிபொழிய
மேவியவன் திருநோக்கம்
மிகவுணர்ந்து நானொருவன்
நாவினிக்க நெஞ்சினிக்க
என்னுடையான் அடிநயந்து
மாவிளக்கின் ஒளியேற்றி
மலர் சொரிந்து கவிபொழிவேன்!

– கவிஞர் காசி ஆனந்தன்

### மிரட்சி !

கூந்தலைச்
சுருக்கு
நகைகளைக்
கழற்று
அலங்கரிக்க
மறு
ஆயுதம்
எடு
பெரியார்
தொடு
சடங்குகள்
மிரள
புதிதாகு !

– கவிஞர் அறிவுமதி

### திடம் !

கைகள் திடமாய் இருக்கு – நெஞ்சில்
கற்பனை மயக்கம் எதற்கு? – அட
இருளைக் கிழித்து
இளைஞா ! எழு உன்
இமைக்குள் சூரியன் இருக்கு!

– கவிஞர் இளைய கம்பன்

### மறையானவன் அண்ணா

அண்ணா என உலகில் பேரானவன் – எனின்
ஆகாயம் போர்ந்தாலும் பேரானவன்
வண்ணக் குறளென்ற மறையானவன் – எது
மறைந்தாலும் என்றைக்கும் மறையானவன்

– கவிக்கோ அப்துல் ரகுமான்

### படித்து முடித்த பகவத் கீதை !

ஒப்பந்தம் தற்காலிகமானது
உயிரையே பணயம் வைத்து
நடத்தும்
நிசமான போராட்டமே
நிரந்தரமானது!
கைகுலுக்குகிறவர்களைப் பற்றி
கவனமாக இரு
அவர்களது கைகளுக்குள்
பொய் குலுக்கிக் கொண்டிருப்பதைப்
புரிந்துகொள் !

– கவிஞர் மு. மேத்தா

### அறிஞர் ' அண்ணா ' (செப் : 15)

கொஞ்சுங் குரல் எனினும் அது
குமுறுங்குரல் அலவோ?
பஞ்சின் மொழி எனினும் அது
பண்பின் மொழி அலவோ!
துஞ்சும் தமிழ் பொங்கும் வகை
சொன்னார் அவர் சொன்னார்
அஞ்சும் பகை அலறும்படி
' அண்ணா ' உரை சொன்னார்!

– கவியரசு கண்ணதாசன்

### ' விழுப் ' புண்?

திரையரங்குகளுக்குள் போய்த்
திரும்பியவர்களின்
உடலில் தேடிப் பாருங்கள்
வீரத்தமிழனின்
' விழுப் ' புண்களை!

– கவிஞர் மனுஷ்ய புத்திரன்

மாதமிரு திருக்குறள் கற்போம் !



## படைச் செருக்கு

*" உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்*
*செறினும்சீர் குன்றல் இலர் "* (குறள்: 778)

போரில் விழுப்புண்பட்டு ஊறு (துன்பம்) நேர்ந்த நிலையிலும் உயிர் விடுவதற்கு அஞ்சாது போர் செய்யும் மறவர்கள் அரசன் அந்நிலையில் போரிட வேண்டாமென்று தடுத்துக் கோபித்தாலும் தமது வீரச்சிறப்பில் சிறிதும் குறைய மாட்டார்கள்

*" புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு*
*இரந்துகோள் தக்கது உடைத்து "* (குறள் 780)

தம்மை வளர்த்துஆளாக்கிய புரந்தவர்களின் கண்களிலே நீர் பெருகும்படி அவர்கட்காகப் போரிட்டுச் சாகப்பெற்றால் அச்சாவு இரந்து கேட்டு பெறும் தகுதியுடையதாகும்.

..... அட்டையில் .....

## தியாக தீபம் !

" மண்ணின் விடிவைக் காண
தோழர்களோடு
விண்மீனாய் இருப்பவன்
உரிமையுடன் நாம் வாழத் தன்
உணவைத் துறந்து
சரித்திரம் ஆனவன்
இராசையா மகனாய்ப் பிறந்து நம்
இன்னல் கண்டு –
வெகுண்டெழுந்த வேங்கை
பாரத நாட்டிற்குக் காந்தி வழியை
பாடமாய் உரைத்தவன்
அராஜகப் பெருந்தீயை அன்று
அகிம்சை என்னும்
அஸ்திரத்தால் அணைத்தவன்
தமிழ் வாழ – தமிழர் நாம் வாழ
தன்னை – தமிழீழ
மண்ணில் விதைத்தவன்
கண்ணாடிக் கண்ணன் நம்
அகக் கண்ணை
'உண்ணாமல் ' திறந்த ஞானி !
புரட்டாசி மாதத்தில் சுடர் பரப்பிய
புலிவீரன் தியாகி திலீபன் "

– முல்லை





# M. K. Sri & Co

*Solicitors & Administrators of Oaths*

**WE SPECIALISE IN**

- Crime
- Immigration
- Matrimonial
- Conveyancing
- State Benefits
- Traffic Offenses
- Advice & Assistance at Police Station

***Principal : M. K. Sritharan***

***Assistant Solicitors***
S. Ravindran
S. Sivasanthiran
V. Ratnam

***Trainee Solicitors***
Avtar Manku
Selvi Ravindran

**LEGAL AID WORK UNDERTAKEN**

*WE ARE FRANCHISED BY THE LEGAL SERVICES COMMISSION*

Tel : 020 8515 7000 ( 4 Lines )
Fax : 020 8515 7030
Fax : 020 8515 7031 ( For Conveyancing only )

2C, FAIRHOLME ROAD
( OFF STATION ROAD )
HARROW
MIDDLESEX HA1 2TN

DX : 4232 HARROW (1)
www.mksri.co.uk

# வந்தபின் வென்றவர் வரிசை

வந்தபின் வென்றவர் வரிசை

இந்தப் பத்தியில் எழுதப்போகும் முதல் தெரிவு ; ஈழத்திலிருந்து இனக்கலவரத்தால் புலம் பெயர்ந்து தமிழ் நாட்டிற்கு வந்து தன்னை நிலை நாட்டிக்கொண்ட ஒரு வணிக விற்பன்னர் திரு. பரமேஸ்வரன் பற்றியது.

திரு. பரமேஸ்வரன் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தந்தையார் திரு. ராஜகோபால். இவர் இளமைக்காலத்தில் றோயல் கல்லூரி மாணவராக இருந்தார். இலங்கைச் சட்டக் கல்லூரியில் LLB பட்டம் பெற்றவர். இலங்கையின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான மகாராஜா ஓர்கனைஷேசனில் இரண்டாண்டுகள் பணியாற்றினார். அதன்பின் இலண்டனுக்குச் சென்று வாழ்ந்ததுண்டு. அதன்பின் 79 – 82 களில் இலங்கையில் பிரபலமான கப்பல் நிறுவனம் ஒன்றில் இயக்குநர் தரத்தில் பணியாற்றிய நாட்களின் பின் இவர் வாழ்வில் 1983 இனக்கலவரம் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. தாயகத்திலிருந்து வெளியேறி தமிழகம் வந்திட நேரிட்டது. அங்கிருந்து வெளியேறிபோது அனைத்ததையும் இழந்த போதும் தன் அறிவினை மாத்திரமே தன்னுடன் எடுத்து வந்தார். புதிய நாட்டில் புலம் பெயர் வாழ்வில் பல துன்பங்களை சுமக்க வேண்டியதாயிற்று. ஆயினும் தன் மன உறுதியை கைவிடாது புதிய வழிகளையும், பாரியத் திருப்பங்களையும் தன் பயணத்தில் மேற்கொண்டமை வாழ்வில் உயர்வாயிற்று.

தன் கல்விக்கும் அனுபவங்களுக்கும் அப்பால் முற்றிலும் வேறுபட்ட புதிய துறையை நோக்கிய பார்வை பிறந்தது. உலகின் பல நாடுகளில் வாழும் புலம் பெயர் ஈழத்தமிழர்களின் தேவைகட்காகவும், உணவு பண்டங்களுக்காவும் அன்று உருவாக்கவும் வியந்த தரத்தைப் பேணவும் காலங்கடக்காது ஏற்றுமதியாக்கவும், உரிய நிறுவனம் ஒன்று அவர் உழைப்பில் உருவாயிற்று. மிகப் பெரிய வாணிபச் சந்தையைக் கொண்ட தமிழகத்தில் – இலங்கையை விட முற்றிலும் மாறுபட்ட வியாபார உத்திகளை காணும் சென்னையில் இவர் மூளையும் உழைப்பும் முன்னின்றன. ஒரு பலமான தளத்தில் தன்னை நிறுத்திக் கொண்டு பாவனையாளர்கள் திருப்தியைக் கவர்ந்து கொண்டு பல இடர்ப்பாடுகளிடையே இவர் பணி கடுமையான உழைப்பாக உயர்ந்தது. வெளிநாட்டு நிறுவனங்கள் பரமேஸ்வரனிடமிருந்து வாங்கும் எதுவும் தரம் மிக்கதாய் தவறாத காலக் கெடுவுடனாய், கண்டிப்பான அளவுடையதாய் இருக்குமென்ற சந்தேகமற்ற ஒரு நல்லெண்ணத்தைக் கொண்டுள்ளன. பாவனையாளர்கள் பொருட்களின் ஏற்றுமதியில் இன்று புலம் பெயர் தமிழர்கள் பரமேஸ்வரனின் தயாரிப்புகளையே அதிகம் பெற்றுக் கொள்கின்றனர், பாவிக்கின்றனர். இடத்துக்கிடம் வேறு பட்ட பெயர்களின் மாறுபட்ட நிறுவனங்களால் வினியோகிக்கப்படினும் இந்தப் பொருட்கள் அனைத்தும் திரு. பரமேஸ்வரனின் நிறுவனத்திலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன என்ற உண்மை பலருக்குத் தெரியாது. இன்று ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளில் பெயர் பெற்று நிற்கும் உணவு பாவனைப் பொருட்கள் அனைத்தும் இவரது கைபட்ட உற்பத்திகளும், ஏற்றுமதியுமே.

இன்று உயர் நிலையில் இருக்கும் திரு. பரமேஸ்வரன் இத்துறையில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முயன்ற அந்த நாட்களை இப்படி நினைவு கூருகிறார். '' நான் முதன் முதலில் பாவனையாளர் உணவுப் பொருட்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பினேன். அதன்பின் ஆறுமாத காலம் எவ்விதமான கேள்விக் கோரல்களுமின்றி என்ன செய்வது என்று விழி பிதுங்கி நின்றேன். என்னை நம்பி என்னுடன் பணியாற்றிய ஊழியர்களுக்கு எப்படி வேதனம் வழங்கப்போகிறேன் என ஏக்கப்பட்டேன். அதன் பின் ஜெர்மனிக்குப் பொருள்களை அனுப்பும் கோரிக்கை ஒன்று கிடைத்தது. அங்கு அனுப்பிய பொருட்களில் எதிர்பார்த்த அளவு வெற்றி பெற முடியாமையால் அதே பொருட்களை இலண்டனில் சந்தைப்படுத்தினேன். அதற்கான ஒத்துழைப்பை திரு. சிவானந்த சோதி இலண்டனில் வழங்கினார். '' அதன்பின் ' நிரு ' நிறுவனம் கனடாவில் எனது பொருட்களை சந்தைப் படுத்த முன்வந்தது. இன்று வரை எனது தயாரிப்புகள் ' நிரு ' நிறுவனத்தின் வணிக முத்திரையுடன் கனடா – இலண்டன் என வெற்றிகரமாக விரிவடைந் திருக்கிறது. இன்னும் ' நிரு ' முன்னணியில் நின்று நிலைக்கின்றமை பாராட்டுதற்குரியதே. இந்த சந்தைப் பிரபலத்திற்கு ' நிரு ' முக்கிய காரணியாவார். ''

ஐரோப்பாவில் ' சூர்யா ' தூள் முதல் தர விற்பனையில் இருப்பது இவரது நிறுவனத்துக்குக் கிடைத்த வெற்றி. அதே தயாரிப்பு ' நிரு ' பெயரில் கனடாவில் விற்பனையாகி வருகின்றது. இந்த வெற்றிகளுக்கு முக்கிய காரணம் திரு. பரமேஸ்வரனின்சிரித்த முகம், சினக்காத தன்மை, எந்த விடயத்தை எத்தனை தடவைக் கேட்டாலும் ஒப்புக் கொள்ளும் பக்குவம், பழகும் அணுகு முறை, அயராத உழைப்பு என்பனவையே. இவரது உற்பத்திகள் தமிழகத்தின் பல பாகங்களில் பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் உருவாகின்றன. பல தொழிலாளர்கள் இவரிடம் பணியாற்றுகிறார்கள். பல குடும்பங்கள் இவரை நன்றியுடன் நினைவு கூருகின்றனர். ஈழத்திலிருந்து தமிழகம் வந்த திரு. பரமேஸ்வரன் அவர்கள் போன்று பலவித இன்னல்களுக்கிடையே முன்னேறியவர் வேறு எவரும் இலர். புலம் பெயர் வாழ்வில் இந்தியாவில் ஒரு புதிய சாதனையாளராக திரு. பரமேஸ்வரனை நாங்கள் பார்க்க முடிகிறது; பாராட்டவும் முடிகின்றது. இவரது நிறுவனத்தின் பெயர் Heyland Export Pvt. Ltd, Chennai என்பதுவே.

**நா. சிவானந்த சோதி**

# LinkAIR
## Travels Limited



ATOL PROTECTED 5047

IATA 91-2 5704 0

SriLankan

*Special Fares to : Colombo, Madras, Singapore, Canada*

**We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO**

361 London Road, Croydon, Surrey CRO 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

புதிய பொலிவுடன் லூசியத்தில்

# கற்பகம்
# Katpakam

**36, Loampit Hill, Lewisham**
**London SE 13 7SW**
**Tel / Fax : 020 8694 8810**

ஞாயிறு தோறும் உடன் பங்கு
ஆட்டிறைச்சி

சகலவிதமான மரக்கறி வகைகள்
பழவகைகள் உட்பட சகல
தேவைகளுக்கும் நாடவேண்டிய
ஒரே இடம்

துரிதப் பணமாற்றுச் சேவை
ரஞ்சன் – இலண்டன்

**POLICE APPEAL FOR ASSISTANCE**

If you have any information on people who may be involved in criminal gangs, violence, financial fraud, intimidation or other crime please phone the confidential Tamil hotline where you can leave a message in Tamil or English

## 0800 587 2935

*Alternatively please speak to your local police*

*Walking for a safer London*

# தேர்தல் பண்பாடு

– தென்கச்சி சுவாமிநாதன்

" அந்த ஆளைக் கண்டா ஏன் இப்படி முகத்தைத் திருப்பிக்கிட்டு வர்றீங்க ? " என்று கேட்டேன். என்னுடன் நடந்து வந்து கொண்டிருந்த ஒருவரிடம்.

" எலக்ஷென்ல என்னை எதிர்த்து நின்னவன் சார் அவன்...! அவன் கூட நமக்கு என்ன பேச்சுவார்த்தை ? " என்றார் மிகவும் கோபமாக.

" சரி ... அந்த ஆள் யார் ? " என்றேன்.

" என் கூடப் பிறந்த தம்பிதான் சார் " என்றார் கோபம் குறையாமலேயே.

" சரி... தேர்தல்தான் முடிஞ்சுபோச்சே. இனிமே என்ன பகை ? "

" என்ன இருந்தாலும் அவன் எதிர்க்கட்சிக்காரன் சார். "

" கட்சி மாறினா என்ன தம்பிங்கற உறவு மாறிப் போயிடுமா ? "

" நீங்க சொல்றது சரிதான். இருந்தாலும் என் தம்பிகூடப் பேசறது தெரிஞ்சா அது எங்க தலைவருக்குப் பிடிக்காதே... ! "

அவர் இப்படிச் சொன்ன பிறகுதான் நான் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தேன். நம்ம ஊர் அரசியல் எந்த அளவுக்கு நம்ம குடும்பத்துக்குள்ளே குழப்பத்தை உண்டு பண்ணி விடுகிறது பார்த்தீர்களா ? அரசியல் ஓர் அண்ணன் – தம்பியைக் கூட அடிதடியில் இறங்கச் செய்து விடுகிறது. நம்ம ஊர் நிலவரம் இப்படி !

இங்கிலாந்தில் எப்படித் தெரியுமா ?

அங்கே ஒரே மேடையில் போட்டியிடுகிற இரு வேட்பாளர்களும் பேசுவார்களாம். பட்டிமன்றம் மாதிரி.

ஒருவர் முதலில் பேச எழுந்து வருவார்.

நான் வெற்றிபெற்றால் என்னென்ன செய்வேன் என்பதை விபரமாகச் சொல்லி விட்டுப் போவார். இதன் பிறகு இவரை எதிர்த்துப் போட்டியடுகிற வேட்பாளர் எழுந்து வருவார். அவர் தான் வெற்றிபெற்றால் மக்களுக்காக என்னென்ன செய்ய முடியும் என்பதையெல்லாம் சொல்லிவிட்டு உட்காருவார்.

இரண்டு பேர் பேசுவதையும் மக்கள் கவனமாகக் கேட்டு விட்டு ஒரு முடிவுக்கு வருவார்கள். யாருக்கு ஓட்டுப் போடலாம் என்பதைத் தங்களுக்குள் தீர்மானித்துக் கொள்வார்கள். அதன்படி செயல்படுவார்கள். இதுதான் அங்கேயுள்ள நடைமுறை.

ஒரு முறை இது மாதிரி ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் சரியாக ஒரு வேட்பாளர் அங்கே வந்து சேர்ந்துவிட்டார். மக்கள் தனக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை வரிசையாகச் சொன்னார். தன் பக்கம் இருக்கிற நியாயங்களை விளக்கிப் பேசினார். ' ஆகவே எனக்கு வாக்களியுங்கள் ' என்று வேண்டுகோளோடு பேச்சை முடித்துக் கொண்டு தன் இருக்கையில் வந்து அமர்ந்தார்.

அது வரையிலும் போட்டி வேட்பாளர் அங்கே வந்து சேரவில்லை. ஏனோ தாமதமாயிற்று. மக்கள் காத்திருந்தார்கள். முதலில் பேசிய வேட்பாளரும் காத்திருந்தார்.

கொஞ்ச நேரம் ஆயிற்று. அவர் இன்னும் வந்து சேரவில்லை. இப்போது முதலில் பேசிய அந்த வேட்பாளரே மறுபடியும் ஒலிவாங்கி முன்னால் வந்து நின்றார். பேச ஆரம்பித்தார். எப்படித் தெரியுமா ?

என்னை எதிர்த்துப் போட்டியிடுகிற வேட்பாளர் ஏனோ இன்னமும் இங்கே வந்து சேரவில்லை. அதன் காரணமாக அவர் தன் பக்கம் உள்ள நியாயங்களை எடுத்துச் சொல்லித் தனக்காக ஓட்டுக் கேட்கிற வாய்ப்பை இழந்து நிற்கிறார்... அதனாலே இப்போது அவர் சார்பாக நான் பேச விரும்புகிறேன். அவர் ஏன் தனக்கு வாக்களிக்கக் கோருகிறார் என்பதை விளக்குவதற்காக அவர் தரப்பு நியாயங்களையும், அவர் சார்பாக நானே உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன்... என்று தொடங்கி ... எதிர்த் தரப்பு வேட்பாளருக்காவும் இவரே பேசி முடித்திருக்கிறார்.

எப்படி இருக்கிறது பாருங்கள் தேர்தல் பண்பாடு ?

இன்னொரு விஷயம். இங்கிலாந்திலெல்லாம் ஓட்டுக் கேட்கும்போதே வெற்றியா, தோல்வியா ? என்பதை ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடியுமாம்.

எப்படித் தெரியுமா ?

ஒரு வேட்பாளர் ஒரு வீட்டுக்கு முன்னால் வந்து நின்று, எனக்கு ஓட்டுப்போடுங்கள் என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம்.

அதுக்கென்ன... பார்த்துச் செய்யிறோம்... ! போயிட்டு வாங்க என்று சில வீடுகளில் வாசலிலேயே சொல்லி அனுப்பி வைத்துவிடுவார்களாம்.

இன்னொரு வீட்டில் உள்ளே அழைத்து காப்பி கொடுத்து அனுப்புவார்களாம்.

இதிலே எந்த வீட்டு ஓட்டு நிச்சயம் தெரியுமா ?

வாசலிலேயே நின்று வழியனுப்பி வைத்துவிடுகிறார்கள் பாருங்கள் ... அவர்கள் ஓட்டு நிச்சயம் ! உள்ளே கூப்பிட்டு காபி கொடுத்து அனுப்புகிறார்கள் பாருங்கள் ... அவர்கள் ஓட்டு நிச்சயமில்லையாம்.

சரி ... அப்புறம் ஏன் அந்த உபசரிப்பு என்று கேட்டால் அது அனுதாபத்தைத் தெரிவிக்கிற ஒரு முறையாம்.

' ஐயோ பாவம் நாம இவருக்கு ஓட்டுப் போடப் போறதில்லை... இதையாவது செய்வோம். சாப்பிட்டுட்டுப் போகட்டும் ' என்பதற்காக அப்படிச் செய்வார்களாம்.

ஆக ... அந்த ஊரில் .. யாருக்காவது நிறைய காபி சாப்பிட வேண்டும் என்று ஆசையிருந்தால் அவர்கள் தேர்தலில் நின்றுத் தோற்றுப் போக தயாராயிருக்க வேண்டும்.

ஒரு சமயம் ஓர் ஊரில் தேர்தல் நடந்ததாம். ஒரு தொகுதியிலே நின்று தோற்றுப் போன ஒருத்தர் .. கையிலே ஒரு துப்பாக்கியோடு ஊருக்குள்ளே சுற்றிக் கொண்டிருந்தாராம்.

ஒரு போலீஸ்காரர் அவரைப் பார்த்துச் சந்தேகப்பட்டார். அதனாலே அவரைத் தடுத்து நிறுத்தி, ' என்ன இது துப்பாக்கியோடு சுத்தறீங்க ? ' என்று விசாரித்தார்.

அதற்கு அவர் சொன்னாராம் :

" சார் ! இந்தத் தொகுதியிலே மொத்தம் ஒரு லட்சம் வாக்காளர்கள். அதிலே எனக்குப் பத்தாயிரம் பேர் மட்டும்தான் ஓட்டுப் போட்டிருக்காங்க. அப்படின்னா எனக்கு வேண்டாதவங்க இந்தத் தொகுதியிலே தொன்னூறாயிரம் பேர் இருக்கிறாங்கன்னு அர்த்தம் ! இப்படி ஒரு சூழ்நிலையிலே நான் என்னுடைய பாதுகாப்புக்கு ஆயுதம் இல்லாமல் நடமாடலாமா ? " என்று கேட்டாராம்.

எவ்வளவு எச்சரிக்கைப் பாருங்கள்.

நம்ம ஊரில் சிலபேர் ஓட்டுக் கேட்கிற விதமே தனி. ஒருத்தர் ரொம்ப சாமர்த்தியமாக ஓட்டுக் கேட்பார். எப்படித் தெரியுமா ? ஒரு வீட்டுக்குப் போவார். அந்தச் சமயத்திலே அந்த வீட்டுக்காரர் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாரோ இவரும் கொஞ்ச நேரம் அவருக்கு உதவுவது மாதிரி செய்வார். அப்புறம் மெதுவாகப் பேச்சுக் கொடுப்பார். ஓட்டுக் கேட்பார். இது அவருடைய பாணி.

ஒரு தடவை இவர் போனபோது அங்கே ஒருவர் வீட்டுக்குப் பின்னாடி மாட்டுக் கொட்டகையிலே பால் கறந்து கொண்டிருந்தார்.

இவரும் ஓடிப்போய் ஒரு சொம்பை எடுத்துக் கொண்டு அதே மாட்டுக்கு இன்னொரு பக்கம்... அதாவது ஏற்கெனவே பால் கறந்து கொண்டிருக்கிறாரே அவருக்கு எதிர்ப்பக்கம் உட்கார்ந்து பால் கறக்க ஆரம்பித்தார். கொஞ்ச நேரம் ஆயிற்று. இவர் மெதுவாக அவரிடம் பேச்சுக் கொடுத்தார்...

" இது... மாதிரி நான் எலெக்ஷன்லே நிற்கிறேன். நீங்க ஓட்டுப் போடனும் ... ! "


" அது முடியாதுங்களே ... ! "

" ஏன் அப்படிச் சொல்றீங்க ? "

" நீங்க நினைக்கிறதுமாதிரி நான் இந்த வீட்டுக்காரன் இல்லீங்க... ! "

" அப்புறம் ? "

' நானும் உங்களை மாதிரி ஓட்டுக் கேட்க வந்தவன்தான். "



# மாரடைப்பு

- டாக்டர் க. கதிர்காமநாதன்

''இலங்கைத் தமிழர், சுமார் 35 வயது, மாரடைப்பால் இறந்தார்.'' கற்பனையுமல்ல. கட்டுக்கதையுமல்ல.

புலம் பெயர்ந்த எமக்கு ஏன் வயது வருமுன் இறக்கும் சாபக்கேடு ? தவிர்க்க வேண்டிய சம்பவமும் தடுக்க வேண்டிய வியாதியுமே இது.

மாரடைப்பு என்றால் என்ன ?

மார்பு + அடைப்பு = மாரடைப்பு

இன்று நேற்று இருந்த வருத்தமல்ல. திருமூலரே திருமந்திரத்தில் கூறுகிறார்.

" இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே "

ஆமாம் இடது பக்க நெஞ்சில் மார்பை அடைக்கிற மாதிரி, அழுத்துகிற மாதிரி வலி ஏற்படும். ஏற்படும்போது யானை ஒன்று நெஞ்சின் மீது நிற்பது போன்றிருக்கும். 20 தொடக்கம் 30 நிமிடங்கள் இவ்வலி நிற்கும். சில வேளை இடது கைகளுக்கும் செல்லும். வியர்க்கும். ஸ்பிரே (Spray) பாவித்தாலும் நிற்காது.

சாப்பிட்ட பின்னரும், அதிகம் வேலை தெண்டித்து செய்வதாலும், மன அதிர்ச்சி தரக்கூடிய செய்திகளாலும், குளிரில் செல்லும் போதும் மாரடைப்பு ஏற்படலாம். யாவித சம்பவமுமின்றியும் ஏற்படலாம்.

எமது இருதயம் தசைகளான ஒரு யந்திரமாகும். தண்ணீர் பாத்திரம் (Water Pump) மாதிரி. இரத்தத்தை சகலவித உறுப்புக்களுக்கும், எலும்பு, தசைகளுக்கும், சுருங்கியும், விரிந்தும் செயல்படும்போது செலுத்துகிறது. இரத்தத்தினூடே பிராண வாயுவும் கலந்துள்ளது. இது இதயத்திற்கும் ஏனைய உடலுக்கும் அவசியம். இதயத்திற்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்தக் குழாய்களுக்கு (Artery) முழு அடைப்பு ஏற்படும்போது மாரடைப்பு தோன்றுகிறது. இதே நேரம் இதயத்தின் தசைகளும் நிரந்தரமாக பாதிக்கப்படுகிறது.

குழாய்கள் அடைப்பு ஏற்படுவது எமது கொழுப்புத் தன்மையை பொறுத்தது. பல காலமாக ஏற்படும் கொழுப்புத் தன்மை படிப்படியாக கூடி, கட்டிகளாக ஏற்பட்டு இரத்தக் குழாய்களை அடைக்கிறது.

**அபாயங்கள்** : உடன் இறப்பு, தப்பினால் அரைவாசி இறந்த மாதிரி வாழ்க்கை. உற்றார் உறவினரால் மனசஞ்சலிப்பு, உளைச்சல், துக்கம் யாவும் ஏற்படும். மருந்தும் கையுமாக மற்றோரின் பரிதாபத்திற்கு ஆளாகி சிவம் அரை சவமாகும் !

**அறிகுறிகள்** : அநேகமானோருக்கு அபாய அறிவிப்பு போன்று அஞ்சைனா (Angina) வரலாம். இது சிறு, சிறு நேர வலிகளாக வரும். சில நிமிடங்களே இருக்கும். பிராண வாயு தற்காலிக அமைப்பாய் இரத்தத்தினூடே தசைகளுக்கு செல்லாதபடியால் ஏற்படும். இருதயத்தையோ, தசை களையோ பாதிக்காது. இதைத்தான் யாவரும் பித்தம், சாப்பாட்டுக் கோளாறு என்று கூறி அசட்டை செய்து வாழ்வது. இதை கண்டுபிடித்தால் நீங்கள் அதிஷ்டசாலி. இதற்கு சிகிச்சையுண்டு. இச்சிறு நெஞ்சு வலி அதிகமாக தெண்டித்து வேலை செய்யும் போதோ, குளிராலோ, மனக்கிலேசத்தாலோ வரலாம்.

பலருக்கு மாரடைப்பு ஏற்பட்டு சுகமேயிருப்பதை தற்செயலாக E.C.G செய்யும் போது கண்டுபிடிக்கப் படுகிறது. ஆனால் எனக்கு நெஞ்சு நோ வரவில்லை என்று குதூகலிக்க வேண்டாம்.

காரணங்கள் : 4 முக்கிய காரணங்களாகும்.

1. புகைத்தல்
2. இரத்த அமுத்தம்
3. கொழுப்புத் தன்மை (Cholesterol)
4. உடல் அப்பியாசமின்மை

உடற்பருமன், பரம்பரை இருதய வியாதி, சலரோகம் ஆகியவையும் மாரடைப்புக்கு காரணமாகின்றன.

## தடுக்கும் வழிகள் :

1. புகைத்தல் : கூடிய வரை குறைத்து புகைபிடிக்கவும். மனதை கஷ்டப் படுத்தி, திடமாக சங்கல்பம் செய்தால் முடியாதது ஒன்றுமில்லை. இவருக்கு புகைத்தல் நிறுத்தும் கிளினுக்கு செல்ல வேண்டி வரும். இங்கே புத்திமதிகளும், நிற்பாட்ட மருந்துகள் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு, மேற்பார்வையும் மேற்கொள்வர். ஆதலால் விசனம் வேண்டாம். பலர் நன்மையடைந்துள்ளனர்.
2. **இரத்த அமுத்தம்** : உப்பைக் குறைத்தும், முன்பே தயாரித்த உணவைச் சாப்பிடாமலும், எண்ணெய் பதார்த்தங்களை குறைத்தும் உண்டால் இதைக் கட்டுப்படுத்தலாம். முக்கியமாக தேகாப்பியாசம் தேவை. உயரத்திற்கேற்ற எடை தேவை.
3. **கொழுப்புத்தன்மை** : நாம் சிறு வயதிலிருந்து எண்ணெய் சாப்பாடுகள், பொரியல்கள் சாப்பிடுவதாலும், அதிகம் சோறு சாப்பிட்டு அப்பியாசமில்லாமல் இருப்பதாலும், ஏற்படுகிறது. மாரடைப்பிற்கு இதுதான் முக்கிய காரணமாகும்.
4. **அப்பியாசமின்மை** : புலம் பெயர்ந்த எமக்கு இதுதான் பலன் ! கார், தொலைபேசி, தொலைக்காட்சி போன்றவை வந்து ஓடி, ஆடி திரிந்த நாம் நவீன வசதிகளால், அடிமைப்பட்டு விட்டோம். தொந்தியும் வண்டியும் தான் மிச்சம். ஒரு கணிப்பை கவனிக்கவும்.

ஆண்கள் இடுப்பளவு - 37" - 40"
அதிக ஏடை 40 மேலே பூதம்

பெண்கள் இடுப்பளவு - 32" - 35"
அதிக ஏடை 35 மேலே பூதகி

இந்த அளவை அதிகக்கூடிய இடுப்பில் தொந்தியில் அளக்க வேண்டும்.

சாப்பிடுகிற உணவை எரிக்காமல் விடுவதால் உடலில் இவை கொழுப்பாக மாறி எடையைக் கூட்டுகின்றன. நாம் இவ்விடம் வந்து போட்டா போட்டி போட்டு, ஆறுதல் இல்லாமலும், அப்பியாசமில்லாமலும் திரிவதால்

ஏற்படும் விளைவே இதுவாகும். இதற்காக ஒரு கிழமையில் கடைசி 30 நிமிடமாவவது 5 நாட்களுக்காவது அப்பியாசம் செய்வது அவசியம்.

" எனக்கும் உனக்குமில்லையடி
பெண்ணே
இது ஊருக்கெல்லோடி கண்ணே "

என நீங்கள் கூறுவது கேட்கிறது. உண்மையில் நான் இவற்றை கடுமையாக கடைபிடிப்பவன். எமது உற்றார், உறவினர் சொற்ப வயதில் இறந்து அவர்கள் குடும்பமே சின்னா பின்னமாகியதை கண்முன் கண்டவன்என்ற முறையில் கூறுகிறேன். இதை விட டாக்டர் என்ற முறையில் திடீர் மரணங்களையும், திகில்களையும் சந்தித்திருக்கின்றேன்.

5. **சலரோகம்** : சலரோக வியாதி ஆசிய மக்களிடம் அதிகமாக இருப்பதாகவும், சலரோகத்திற்கும் இருதய வியாதிகளுக்கும் சம்பந்த மிருப்பதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. சலரோக வியாதிக்காரர்கள் நெஞ்சு நோவு சிறிது ஏற்பட்டாலும், டாக்டரிடம் செல்லவும். பரிசோதனைகள் செய்யவேண்டி வரும்.

**நாம் செய்ய வேண்டியவை :**

40 வயதிற்கு மேற்பட்டோர் டாக்டரிடம் சென்று இரத்த அமுத்தத்தையும், இரத்தத்திலிருக்கும் கொழுப்புத்தன்மை, இனிப்புத் தன்மை அறிதல் வேண்டும். பரம்பரை இருதய வியாதி உடையோர் 40 வயதின் முன்னரே இவற்றை செய்தல் வேண்டும்.

இலங்கையில் நாங்கள் ஒரு நாளைக்கு மூன்று முறை உணவருந்தினோம். இங்கும் அப்படி சாப்பிடுவது சரியல்ல. இதனால் யாவரும் பருத்து வண்டி தொந்தியோடு இருக்கின்றோம். ஒரு நாளைக்கு ஒரு முறை சாப்பிட்டால் போதும் ! மற்ற இருவேளைகளில் இலேசாக சாப்பிட்டால் போதும் ! !

கூடியவரை இலை தழைகளையும், பழங்களையும் சாப்பிடல் வேண்டும். ஒரு நாளைக்கு பழ, இலை வகை சாப்பிடுவோர் இருதய வியாதியிலிருந்து தப்புவதாகக் கூறுகின்றனர்.

மாமிசத்தில் கொழுப்புத் தன்மை இருக்கிறது. இதை விட்டு மீன் வகைகளை கிழமைக்கு ஒரு முறையோ, இருமுறையோ சாப்பிடலாம். இவற்றிற்கும் மேலாக ஆங்கிலேயர் போன்று சைவ உணவிற்கு மாறலாம்.

ஒரு வேண்டுகோள் ! எமது வாழ்க்கை முறையை மாற்றல் வேண்டும். வித்தாரமும், கடம்பும் வேண்டாம். செத்தாரைப் போல் திரி என்று பட்டினத்தார் கூறியவாறு எளிமையான வாழ்க்கை வாழ வேண்டும். அவனுக்கு ஒரு கண் போனால் எனக்கு இரண்டு என்றிருக்க வேண்டாம். யாருக்காவது இருதய சிகிச்சை அவசியம் தயவுசெய்து மறுக்க வேண்டாம்.

சிறு நெஞ்சுவலி என்றாலும் சீவனோடு டாக்டரிடம் செல்லவும். பெருவலி என்றால் உடனே வைத்தியசாலை.

***" நாம் சிவமாக இருப்போம் - சீவனோடு ! "***

+++

ALL UNDER ONE ROOF

SKC

SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

SOLICITORS & ESTATE AGENTS

Sales, Letting & Management

- வீடு மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல், விற்றல், வாடகைக்கு விடுதல்.
- அனுபவம் மிக்க சட்டத்தரணிகளின் ஆலோசனைகள், சேவைகள் எல்லாமே ஒரே கூரையின் கீழ் செய்து கொடுக்கப்படும்.
- வீடுகளுக்கும் வியாபார நிலயங்களுக்குமான சகல விதமான வங்கி கடன் உதவிகளும், காப்புறுதி திட்டங்களும் சுயாதீனமான தரகர்களின் மூலம் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- வடமேற்கு லண்டனில் உள்ள பல்வேறு எஸ்ரேற் ஏஜென்டுகளை துணை ஏஜென்டுகளாக நியமித்து விரைவிலே வீடுகளை விற்பனை செய்கின்றோம்.
- சட்டத்தரணிகளின் தொழில் தர்மம் எல்லா வகையிலும் பேணப்படும் ஏனென்றால் நாம் Law Societyயினால் நெறிப்படுத்தப்படுபவர்கள்




557 High Road
Wembley, Middlesex
HA0 2DW

Opening Hours
Mon-Fri: 9am - 6pm
Sat: 9.30am-5pm


Tel: 020-8795 0648
Mobile: 07831 195 979
Fax: 020 8795 0649

40ஆவது ஆண்டு நினைவாஞ்சலி

மகன் – சிவானந்த சோதி
மருமகள் – பத்மினி

பேரப்பிள்ளைகள் :
சிவநந்தினி சுந்தரேசன்
பிருந்தா பிரபு
ராதிகா ராஜ்குமார்
காயத்ரி
ஜெயபாரதி
செந்தூரன்

பூட்டப் பிள்ளைகள் :
மதுரன்
மிதுன்
மைலன்
செல்வி



மகள் – ராஜேஸ்வரி
மருமகன் – நிக்லஸ்

பேரப்பிள்ளைகள் :
மங்களேஸ்வரன் நளினி
மனோரஞ்சன் உஷா
மகேந்திரன் வாசுகி
கிருபாநிதி மாலினி
வத்சலா ஜெயகுமார்
ஜெயநிதி

பூட்டப்பிள்ளைகள் :
ராகவி, ராகவன்
செந்தூரன், மதுரன்
கார்த்தீபன், ரகேஸ்
சிவகணேஷ், ஜெயவத்சன்
அபிராமி, திருமுருகன்,
திருகுமரன்

சரவணை கரம்பன்

**இளையதம்பி நாகராசா**

தோற்றம் : 25.07.1906 மறைவு : 27.09.1964

இந்தப் படத்தில் உள்ளவர்கள் யார் ?
இந்தப் படம் எடுக்கப்பட்ட ஊர் எது ?
எந்த ஆண்டில் காந்தியடிகள் இலங்கைக்கு வந்தார்?



சரியான விடையை எழுதி அனுப்பும்
அதிர்ஷ்டசாலிக்கு 25 பவுண் பரிசு

கந்தையா கமலக்கண்ணன்
(லெப்ரினண்ட் யாதவன்)

26.08.1969 – உதயம்
14.07.1991 – மண்ணுக்கான வீரச்சாவு
களம் : ஆனையிறவு திறந்த வெளிச் சமர்



யாழ் ஸ்ரான்லி கல்லூரியின் பழைய மாணவர்
மண்ணுக்காய் மரணித்த மாவீரர் வரலாற்றில்
நீயும் ஒரு கற்றூணாய் நிமிர்கின்றாய் எம் மகனே !
உன் நாமம் நீண்டு நிலைக்கட்டும் !
நினைவில் தொடரட்டும். ஏங்கும் எம்
இதயங்களில் என்றும் நீ வாழ்வாய் !

# குறுகத் தரித்த குறள்

சுப. வீரபாண்டியன்

ஒன்றை அல்லது ஒருவரை வாழ்வில் தேர்ந்து தெரிதல் மிகக் கடினமான பணி.

உலகில், ஒரு செயலை அல்லது ஒரு மனிதரை எப்படித் தேர்ந்தெடுப்பது?

வாழ்வியல் நூலான வள்ளுவம் நமக்கு வழி சொல்கிறது

*'' குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல் ''*

என்னும் குறள்,ஒருவரிடமுள்ள நல்லனவற்றையும், தீயனவற்றையும் நிறுத்துப் பார்த்து, அவற்றுள் எது கூடுதலோ அவ்வழி முடிவுக்கு வர வேண்டும் என்று கூறுகின்றது.

எளிமையான, அதே நேரத்தில் அருமையான வழியை இக்குறள் சுட்டுகின்றது. எந்தக் குழப்பமும் இல்லை.

ஆனால், வள்ளுவர் இன்னொரு குறளை,

*'' அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்*
*ஊதியமும் சூழ்ந்து செயல் ''*

என்று படைத்துள்ளார்.

இரு குறட்பாக்களுக்குமிடையில், ஒரு நுட்பமான வேறுபாடு உள்ளதை நாம் உணரலாம். ஒரு குறளில் '' குணத்தை '' முதலில் நாடச் சொன்ன வள்ளுவர், மறு குறளில் '' அழிவதை '' முதலில் எண்ணும்படி கூறுவது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.

'' அழிவதூஉம் '' எனத் தொடங்கும் குறள், ' தெரிந்து செயல்வகை ' என்னும் அதிகாரத்தில் உள்ளது. தெரிந்து செயல்வகை என்பது, ஒரு வினை செய்யுங்கால், அதனை நன்றாக எண்ணிச் செய்ய வேண்டும் என்னும் பொருள் உடையது.

புதிதாகத் தொழில் தொடங்கும்போது, பலரும் ஆர்வ மேலீட்டால், அதில் வரக்கூடிய துன்பங்களையும் நட்டங்களையும் கருதாது, வரக்கூடிய இலாபங்கள் பற்றிய கனவிலேயே இருப்பர். அது தொழிலுக்கு நல்லதன்று.

அதனால்தான் தொழில் செய்யப் புகும் ஒருவர், அதில் வரக்கூடிய நட்டங்களை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும் என்கிறார்.

' அழிவது ' என்னவென்று அறிந்தபின் ' ஆவது ' என்னவென்று பார்க்கலாம். பிறகு, வழி வழியாய் வரக்கூடிய பயனையும் எண்ணலாம் என்கிறது குறள்.

ஆனால், மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, அவர்களிடம் இருக்கக்கூடிய குற்றங்களை முதலில் ஆராய வேண்டியதில்லை. முதலில் நாடப்பட வேண்டியது குணம்தான். அதனை ஆராய்ந்தபின் ' குற்றமும் நாடி ' என்பதில் உள்ள ' உம் 'மைக் கவனித்தல் வேண்டும். அதற்கு அவ்வளவு முக்கியத்துவத்தை வள்ளுவர் தரவில்லை ' குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை ' என்னும் பழந்தமிழ் வரியையும் இங்கு எண்ணுதல் பொருத்தம்.

எனவே, தொழிலைத் தேர்ந்தெடுக்கும்போது அதில் உள்ள துன்பங்களை முதலில் ஆராய்வதும், மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அவர்களிடம் உள்ள நல்லனவற்றை முதலில் எண்ணுவதும் அறிவுடையார் செயல் என்பதே வள்ளுவம் காட்டும் வழி.

இலண்டன் மாநகரில்

# Galaxy News


உங்களுக்குத் தேவையான விரும்பிய
நூல்களை ஓடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு
**Mr. K. Alagan**

## Galaxy News

84, Brooks Croft Road
London E17 4JR


Tel : 07958 360 176
Fax : 020 8527 2324



# Meera Gold Smith

*Gems & Jewellery*

896 Garratt Lane, Tooting, London SW17 ONB
Tel : 020 8767 2616 Mob : 07958 948 685
www.meera_jewellery.com



பழைய தங்கத்தில்
புத்தம் புதிய நகைகள் செய்து கொள்ள,
அதிர்ஷ்ட நவரத்தின கற்களை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான 22ct சிங்கப்பூர்
நகைகளை நியாய விலையில் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ள

**MEERA GOLD SMITH**

தங்கம் வாங்கும்பொழுது தங்கம்
தெரிந்தவர்களிடம் வாங்குங்கள்

**MEERA GOLD SMITH**

பிரமாண்ட காட்சியறை இல்லை ஆனால்
பிரமிக்க வைக்கும் கலைவண்ணம் வடிக்கும்
நகைச்சிற்பிகளின் கலைக்கூடம்





வோல்த்தம்ஸ்ரோ

**கற்பக பிள்ளையார் கோயில்**

கொடியேற்றம் 10.09.2004 அன்று
ஆரம்பித்து ஞாயிற்றுக் கிழமை
19.09.2004 அன்று தேர்த்திருவிழா
நடைபெறும்
இந்த திருவிழா காலங்களில்
சொல்வேந்தர் சுகி. சிவம்
அவர்களின் ஆன்மிக சொற்பொழிவு
இடம்பெறும்.

THE FINE SRI LANKAN & INDIAN RESTAURANT

" அறுசுவை பதார்த்தங்கள் அனைத்தையும் உயர்தரமாய் வழங்கிடும் ஓர் உணவகம் "

406 - 408 Lewisham High Road
Lewisham
London SE 13 6LJ
Tel : 020 8690 3392 - 6902617

EELAM SHOP

399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
Tel : 020 8690 6545

Taste of Eelam




HOTEL WESTEERN

Hotel Westeern (Pvt) Ltd

35, Frankfurt Place, Bambalapitiya, Colombo 4, Sri Lanka
Tel : 0094 1 507161, 0094 1 507162, 0094 1 507163, 0094 74 518485
Fax : 0094 74 518481

*Ready to accommodate you ......*
*....at the Sun kissed Beach of Srilanka*
*30 Guest Rooms, 5 Luxurious Suites*
*Restaurant & Party Hall*
*Conference Hall*



HOTEL WESTEERN

Situated at the Heart of Colombo City

E-mail : infor@hotelwesteern.com Web : www.hotelwesteern.com

Approved by the Ceylon Tourist.com



மாபெரும் பட்டுச் சேலைப் பரிசுத் திட்டம்

வழங்குபவர்கள்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North
EASTHAM E12 6SA
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

இப்படத்தில் இரண்டு சேலைகள்
பிரசுரிக்கப்பட்டுள்ளன
கேள்வி 1: சேலைகளில் அசல் எது நகல் எது
கேள்வி 2 : இரண்டு சேலைகளின் இந்திய
விலையைச் சரியாகக் குறிப்பிடவேண்டும்.
சரியாகக் குறிப்பிடும் அதிர்ஷ்டசாலிகளுக்கு
£ 100 பவுண் பெறுமதியான கோலம்
சேலை பரிசாக வழங்கப்படுறது.
எமது நிறுவனத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் பதிலை
அனுப்ப வேண்டிய முகவரி

தமிழர் தகவல்



# சுப்பிரமணிய பாரதியார்

நிஷானி ஜெயபாலன்

கவிஞர் பாரதியை அறியாதவர் ஒருவரும் இவ்வுலகில் இல்லை. பாரதியார் பாரிலே பெரும் வல்லரசாக விளங்கும் இந்தியாவில் அவதரித்தார். பாட்டுக்கொரு புலவர் எனப்புகழப்பட்ட பாரதியார் 1882 ஆம் ஆண்டு முதல் 1921 ஆம் ஆண்டு வரை வாழ்ந்து அமரரானார். அந்த குறுகியகாலத்தில் தனது தேசத்திற்கும் இனத்துக்கும் ஒரு சால்பு உண்டு, பண்பு உண்டு, தன்மை உண்டு, அந்த சால்பும் பண்பும் தன்மையும் தருமமும் அகலாதிருக்கின்ற வரைதான் அந்த இனம் இனமாக இருக்கும் என்று வலியுறுத்தி கூறினவராவர். அவர் அன்பு, அடக்கம், வாய்மை, கருணை, கண்ணியம் என்னும் பண்பினால் உயர்ந்தவர் எனப் போற்றப்பட்டார்.

'' பாரதியார் ஓர் தேசியக் கவிஞர். தமிழ்மறையாம் திருக்குறள் ஆகியவற்றின் கருத்துக்கருவூலங்களை இனிய முறையில் எழுதியவர். ஆங்கிலேயர் ஆட்சியிலே தமிழ் மக்களையும் இந்தியர்களையும் சுதந்திரமாக வாழ, சுதந்திர பாடல்களை இயற்றியவர். அப்பாடல்கள், தேசப்பற்றையும் மக்களின் உணர்வையும் தட்டி எழுப்பக்கூடிய சக்தியைப் பரப்பின. தமிழ் கவி பாரதியார் இந்தியாவில் மதவெறியும் இனவெறியும் கோர தாண்டவமாடும் நேரத்தில் சுதந்திரம் அடைய வேண்டுமென்று பாடுபட்டவர். அவர் தான் பிறந்த நாட்டை மாத்திரம் வளப்படுத்தவில்லை. உலகம் முழுவதையும் சீரான முன்னேற்றத்துக்கு வழிவகை காட்டியவர். பாரதியார் வறுமையான குடும்பத்தில் பிறந்தவர். வறுமைக் கோட்டில் வாழ்ந்தாலும், பணப்பேராசை கொண்டவர் அல்லர். வாழ்க்கையில் கல்விக் கலையே செல்வத்துக்கு மேலானது என்ற பண்பாட்டில் வாழ்ந்தவர். அவரின் பண்பாட்டுக்குச் சில சிந்தனைகளை இங்கு கூற விரும்புகின்றேன். ''

பாரதியார் வறுமையில் வாழ்ந்தபோது, பன்னிரண்டு ரூபாய் சம்பளத்தில் எட்டயபுரம் மன்னனிடம் பணி புரிந்தார். நம் தேசம் வெள்ளையரிடம் அடிமைப்பட்டிருப்பது போல, நாம் செல்வரிடம் அடிமைப்பட்டுள்ளோம், என்று பாரதி கூறியதை யாரோ மன்னரிடம் கூறிவிட்டார்கள். மன்னர் உடனடியாக அவரை வேலையில் இருந்து நீக்கிவிட்டார்.

பாரதியாரின் புலமையைப் பாராட்டி அவர் எழுதிய கவிதைகளின் தரத்தையும் உத்தேசித்து, ஒரு நூறு ரூபாய் நோட்டை பெரியவர் ஒருவர் அவரிடம் வழங்கியபோது ஏற்க மறுத்து விட்டார். கொடுத்தவர் இது நன்கொடையில்லை. தங்களை உயர்வாகக் கருதுகிறேன் என்று வற்புறுத்தினார். '' அப்படியானால் நீங்கள் அந்தப் பணத்தை உங்கள் கையிலேயே வைத்துக் கொள்ளுங்கள். நான் அதை எடுத்துக் கொள்கிறேன். ஏனென்றால் நீங்கள் கொடுக்க, நான் வாங்கினால் தங்கள் கை மேலேயும் என் கை கீழேயும் வரும் அப்போது பிச்சை எடுப்பது போலவும், நான் பிச்சை ஏற்பது போலவும் எனக்குத் தோன்றும். என்றைக்கும் சரஸ்வதி தேவி லட்சுமி தேவிக்குப் பணிந்தவள் அல்லள். ''மனித குல பண்பாட்டை, தன் எழுத்துக்கள், பாடல்கள் மூலம் வளர்த்தவர் பாரதியார் ஆவார்.

## குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 டி |
| | க | | | |
| 6 | | 7 | தி | |
| | | வை | | 8 |
| | 9 | | | |

**இடமிருந்து வலம்**

1. ஒரு மாவீரன் பிறந்த ஊரின் முற்பகுதி (5)
6. புலி (3)
7. சிறையில் இருப்பவன் (2)
9. பள்ளிகளில் பிள்ளைகளை எழுதச் சொல்வார்கள் (4)

**மேலிருந்து கீழ்**

1. வீட்டுக்கு வருபவர்களுக்கு நாம் கொடுப்பது (5)
2. கல் வகையைச் சார்ந்தது. தலைகீழாய் உள்ளது (5)
3. வெயிலால் ஏற்படுவது (3)
4. அளவுக்கு அதிகமாக இனிப்பைச் சாப்பிட்டால் இப்படித்தான் ஆகும். எழுத்துக்கள் இடம் மாறிக் கிடக்கின்றன. (5)
5. தலைகீழாய்க் கிடக்கும் இப்பொருளைத் திருப்பி வைத்தால் முகம் பார்க்கலாம் (4)
7. தமிழக ஆறு ஒன்று தலைகீழாய் ஓடுகிறது (2)
8. ஆற்றின் இருபுறமும் இது வேண்டும் (2)

முதலில் வந்து சேரும் சரியான விடைக்கு 25 பவுண் பரிசாக அனுப்பி வைக்கப்படும்

உங்கள் விடைகளைத் **தமிழர் தகவல்** முகவரிக்கு அனுப்பி வைக்கவும்


வர்ணஜால
அடுத்த


ம் எங்கே !
இதழில்...




அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய்,
வடகம், மரக்கறி வகைகள், பழவகைகள், கடல் உணவுவகைகள்,
இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்

259-261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 8686 4577

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

# BEST FOOD SUPERMARKET

LICENCE - NEWS - GROCERIES - HALAL MEAT - FRESH & FROZEN FISH - FRUIT & VEG - AFRO CARIBBEAN - SRI LANKAN & ASIAN FOODS

# எங்கள் ஊர்

## " மருதங்கேணி "

[ இந்தக்கட்டுரை வாய்க்காலுக்கு அணைகட்டித் தந்தவர்கள் திரு. கீதன், திரு. நடராச சிங்கம் (லண்டன்) திரு. அன்புமயில் (டென்மார்க்) மற்றும் இந்த ஊரைச் சேர்ந்த திரு. தங்கமயில், திரு. மணிவண்ணன் (லண்டன்) திரு. சிவனேசன் (அமெரிக்கா) ]

தமிழீழத்தின் வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் உள்ள பல கிராமங்களில் மருதங்கேணி மிகவும் பழமைவாய்ந்த கிராமம். பண்டைய வரலாற்று நூல்களில் " மருதங்கேணி " பற்றிய ஒரு சில குறிப்புகள் இருப்பது அனைவரும் அறிந்ததே ! ஊரின் எல்லையில் அமைந்துள்ள கந்தசாமி கோயிலின் அருகே ஒரே ஒரு கேணியும் அதைச்சுற்றி ஆயிரக்கணக்கான மருத மரங்களும் காணப்பட்டதால் இந்த ஊரின் பெயர் மருதங்கேணி ஆயிற்று. இந்த ஊர் மண்ணுக்கென்று ஒரு தனிச் சிறப்புண்டு. அதாவது கோடைக் காலத்தில் அதிகமாக மண்ணரிப்பு நடைபெறும் கிராமம் இதுவே ! சிலர் " மணல் மண் விளையும் " பூமி என்பார்கள். உண்மைதான் மலைபோல் மண்கும்பிகள் இங்கே ஏராளம் உண்டு. இதன்மேலே வெயிலோடு போராடி வெற்றிபெறும் " முள்ளிக்கொடிகள் " படர்ந்து காணப்படுவதால் இந்த இடங்களை " முள்ளிப் பிட்டிகள் " என்று அழைப்பார்கள்.

இங்கே வாழும் மக்களுள் அதிகமானோர் மீன்பிடித் தொழிலையும், மீதிப்பேர் கமத்தொழிலையும் விரும்பிச் செய்கின்றனர். 1991 ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி – ஆனையிறவு ஆகாய கடல் வெளிச்சமரில் பல கிராமங்கள் இடம்பெயர்க்கப்பட்டபோது பல கிராமத்து மக்களை அன்போடு அரவணைத்துத் தாங்கிப் பிடித்த ஊர். ஊர்த்தலைவர் திரு. க. தருமலிங்கம் இளைஞர்களை வைத்து ஒரு குழு அமைத்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவிகள் செய்தார். ஊர் முன்னேற பாடுபட்டார். முதல் முதலில் கடல் தொழிலாளர் சங்கம் அமைக்க வழிவகுத்தவர். பின்னர் வடமராட்சிக் கிழக்கின் அனைத்துக் கிராமங்களையும் சேர்த்து " வடமராட்சிக்கிழக்கு கடல் தொழிலாளர் மீன்பிடிச்சங்கம் " உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பல ஆண்டுகள் அனைத்துக் கிராமங்களுக்கும் சேவை புரிந்தவர் என்றால் இந்தப் பெருமை இவர் பிறந்த இந்த மண்ணுக்குத்தானே சேரும்.

இது மட்டுமின்றி கலை இலக்கியங்களிலும் சரி, விளை யாட்டிலும் சரி இந்த மண் பின்தங்கிப் போகவில்லை. பிரபல எழுத்தாளரும், நடிகரும், நாடக இயக்குனருமான துரை பல கலைஞர்களை உருவாக்கினார். இவரோடு சேர்ந்து கதிரேசு செல்வனும் கலைக்காகப் பாடுபட்டார். பிரபல கிராமத்துப் பாடகர் கறுவல்தம்பி என்றால் தெரியாதவர்கள் கிடையாது. நாட்டுக்கூத்தில் மிகச் சிறந்து விளங்கியவர். அனைத்து மக்களாலும் " அண்ணாவியார் " என்று அன்போடு அழைக்கப்பட்டவர். மற்றும் பழம் பெரும் நாடக இயக்குனர் திரு. தங்கனைத் தந்த ஊரும் இந்த ஊரே. நடிகர் திரு. யோகராசா சிவபெருமான் பாத்திரம் மட்டுமே ஏற்று நடிப்பவர். பல மேடைகளில் நடித்து தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பிடித்து வைத்திருந்தவர். இவர் ஒரு சிவன் பக்தனும் கூட. இவையெல்லாம் இந்த மண்ணின் பெருமையைத்தானே பறைசாற்றுகின்றன.

மற்றும் திரு. சுந்தரலிங்கம், பாக்கியராசா, யோகராசா, தனபாலசிங்கம், வேலு ஆகிய பெரியோர்கள் ஊருக்காக உழைத்தவர்கள். பல கிராமத்து மக்களுக்கு வேலை வாய்ப்புகளைக் கொடுத்தவர்கள். இளைஞர்களை விளையாட்டுக்களில் உயர்த்தவேண்டும் என்பதற்காக " கணேஸ் ஆனந்தா " விளையாட்டுக் கழகத்தை உருவாக்கினார்கள்.

இதுமட்டுமின்றி பிரபல நாடக நடிகரும் ஒரு கவிஞருமான மேஜர் பைந்தமிழனைத் தந்த ஊரும் இந்த ஊரே. ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இவர் சென்று தமிழ்த் தேசியக் கொடியின் விளக்கத்தைத் தந்தவர். அரசியலில் சிறந்து விளங்கிய அருள்ராஜா (பைந்தமிழன்) மருதங்கேணி இந்து தமிழ் கலவன் வித்தியாலயத்தில் படிப்பில் முதல் மாணவனாக சிறந்து விளங்கியவர். அனைத்து மாணவர்களின் ஆக்கங்களையும் கையெழுத்துப் பிரதிகளாகச் சேர்த்து நூல்களாக வெளியிட்டவர். அதிபர், ஆசிரியர்கள், அனைவரிடமும் விடை பெற்றுச் சென்று தன்னைத் தமிழ்ப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டவர்.

இந்த மருதங்கேணிப் பாட சாலைக்கு என்று ஒரு தனி வரலாறு உண்டு. எத்தனையோ பட்டதாரிகளை நல்ல சிந்தனையாளர்களை, நாட்டுப் பற்றாளர்களை உருவாக்கியிருக்கிறது. அதிபர் திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் இந்தப் பாடசாலை வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்விக்காகவும் மிகவும் பாடுபட்டு உழைத்தவர்.

இந்த ஊர் மக்கள் அதிகமான கடவுள் நம்பிக்கை உடையவர்கள் என்பதற்கு இங்கே உள்ள பல கோயில்களே ஆதாரம். கடற்கரைப் பிள்ளையார்க் கோயில், நாகதம்பிரான் கோயில், விறுமர் கோயில், வடலியடிப் பிள்ளையார், மடத்தடிப் பிள்ளையார் கோயில்கள், வீரபத்திரர் கோயில், கந்தசாமி கோயில் போன்றவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்லலாம். இதில் குறிப்பாக ஊர் எல்லையில் அமைந்துள்ள கந்தசாமி கோயில் மிகவும் பழமை வாய்ந்தது. அந்தக்காலத்தில் சிற்பிகளை வரவழைத்து செதுக்கிய கோயில் என்பார்கள். மற்றும் கடற்கரைப்

பிள்ளையாரின் அருகே அமைந்துள்ள நாகதம்பிரான் கோயில் பற்றிக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். இக்கோயிலின் சிறப்பு என்னவென்றால் சிலகாலங்களில் மண்கும்பிகள் கோயிலின் முக்கால் பகுதியை மூடிவிடும். பின்னர் காற்றடிக் காலங்களில் மண்ணரிப்பு நடைபெறும்போது கோயில் மெல்ல மெல்ல வெளியே வரும். இதன் தனிச் சிறப்பைக்காண பக்தர்கள் அணிதிரள்வது ஊரறிந்த உண்மை.

இன்றைய சினிமாக்காரர்கள் பிரமிட்டுகளையும், சீனப்பெருஞ் சுவரையும்தேடி நாடு நாடாக அலைகின்றனர். எங்கள் நாட்டின் போர்க்காலச் சூழ்நிலை.. இப்படி இருக்கிறது.... இல்லையென்றால் இயற்கை அழகிலும் சரி, சினிமா உலகிலும் சரி எங்கள் நாட்டுக்கு என்று ஒரு தனி முத்திரை பதிந்திருக்கும். இதில் இந்த ஊரும் அடங்கியிருக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இன்னும் மருதங்கேணி வைத்தியசாலை, சந்தைகள், நூல் நிலையங்கள் அனைத்தும் மக்களின் சமூக நலன்களுக்கு ஊன்றுகோல்களாய் இருந்திருக்கின்றன. இன்றைக்கும் நன்மை புரிகின்றன. இப்படியெல்லாம் சமூக கட்டமைப்போடும் , மிகுந்த ஒற்றுமையோடும் அழகோடும் காணப்பட்ட இந்த மருதங்கேணி கிராமம் இன்று போர்க்காலச் சூழலினால் மிகவும் சிதைவுற்றுக் கிடக்கிறது. சிங்களப் படைகளின் வெறியாட்டத்தினால் சிதைவுற்றது மருதங்கேணி கிராமம் மட்டுமல்ல. மக்களின் மனங்களும்தான். மருதங்கேணி வைத்தியசாலை, பாடசாலை ஷெல் வீச்சுகளால் முற்றாக அழிந்து கிடக்கிறது. இது மட்டுமா ? விளையாட்டு மைதானங்கள், கோயில்கள் என்று அனைத்தும் சிதைவுற்றுக் கிடக்கிறது.

இருப்பினும் ஊர் மக்கள் இப்போது தட்டி எழுப்பத் தொடங்கிவிட்டார்கள். பாடசாலை ஓரளவு நிமிர்ந்துவிட்டது. வெளிநாடுகளில் இருக்கும் இவ்வூர் மக்கள் உதவி புரிகின்றனர். கொஞ்சம் கொஞ்சமாக " மருதங்கேணி " பழைய நிலைக்குத் திரும்புகிறது. இன்னும் சிறிது காலத்தில் இந்த ஊரில் பழைய படியும் ஒரு புதிய ஒளிக்கீற்றுத் தோன்றும் என்பதற்கு எந்தவித சந்தேகமுமில்லை.

– வத்தியூர் மைக்கல் –

# மணிபல்லவம்

டாக்டர் எஸ். தியாகராஜா

மணிமேகலை காப்பியத்தில் மணிபல்லவம் என்ற பெயரால் அழைக்கப்படும் தீவகம் நயினாதீவு என்பதே கடந்த அரை நூற்றாண்டுகளாகப் பல அறிஞர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் கருத்தாகும்.

ஆனால் மணிபல்லவம் என்ற பெயர் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய புராதன நகரங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தீவகம் முழுவதற்கும் உரிய பெயராக இருப்பதை – வரலாற்று, தொல்லியல், இலக்கிய ஆதாரங்கள் மூலம் இந்த ஆய்வு அறுதியிட்டு உறுதியாக நிறுவுகிறது.


ஈழநாட்டின் வடபகுதியான யாழ்ப்பாணத் தீபகத்தை மணிமேகலை, மணிபல்லவம், நாகநாடு, சம்புத்தீவு ஆகிய பெயர்களால் அழைக்கிறது[1]. அக்காலத்தில் நாகர் குல மக்கள் வாழ்ந்த இப்பிரதேசத்தை மகாவம்சம் நாகதீப (நாக தீபம்) எனச் சொல்கிறது[2].

கடந்த அரை நூற்றாண்டுகளாக பல அறிஞர்கள் மணிபல்லவம் என்ற பதம் யாழ்ப்பாணத் தீவகத்திற்கு அருகிலுள்ள நயினாதீவைக் குறிப்பதாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். நயினாதீவு நாகர்கள் வாழ்ந்த இடமாக இருந்த போதிலும் – (வையா பாடல் இதை நாக நயினா தீவு எனச் சொல்லும்) மணிபல்லவம் என்ற பதம் யாழ்ப்பாணத் தீபகத்தையே குறித்து நிற்கிறது என்ற உண்மை பின்வரும் ஆதாரங்கள் மூலம் நிறுவப்படுகிறது.

## 1. மணிபல்லவமும் நாகதீபமும்

கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் மகோதரன், சூளோதரன் ஆகிய நாக அரசர்கள் அரசுரிமைக்காகப் போரிட்ட பூமியை மணிமேகலை மணிபல்லவம் என்றும், மகாவம்சம் நாகதீபம் எனவும் குறிப்பிடுகிறது[3]. ஆகவே இவ்விரு பதங்களும் ஒரே நாட்டையே குறித்து நிற்கின்றன.

கி.பி நான்காம் நூற்றாண்டிற்குரிய வல்லிபுரப் பொற்சாசனம் நாகதீபத்தை வல்லிபுரத்திலிருந்து



இசிகிரியன் என்பவன் நிர்வாகம் செய்தான் என்பதை எடுத்துரைக்கிறது[4]. வல்லிபுரத்திலிருந்து இசிகிரியன் நிர்வகித்த நாகதீபம் யாழ்ப்பாணத் தீவகமே என்பதில் ஐயமிருக்க முடியாது.

## 2. யம்புத் துறையும் திருவடி நிலையும்

மணிபல்லவத்தின் (சம்பத் தீவு) கடற்கரையில் புகழ்பெற்ற ஒரு துறைமுகமும், அத்துறையின் அருகில் புத்த பகவானின் பாதபீடிகை (திருவடிகள்) கொண்ட ஒரு திருத்தலமும் இருந்ததை மணிமேகலை பல இடங்களில் எடுத்துரைக்கிறது[5].யாழ்ப்பாணத்தின் வடமேற்குக் கரையில், கீரிமலைக்கு மேற்கேயுள்ள சம்புத்துறையும் (யம்புத்துறை), அத்துறைக்கு அருகிலுள்ள " திருவடி நிலை " என்ற பெயரைக் கொண்ட இடமுமே மணிமேகலை குறிப்பிடும் துறைமுகமும், புத்த பாத பீடிகை இருந்த இடமும் என்பதற்கான சான்றாதாரங்கள் உள.

மகாவம்சம் இத்துறைமுகத்தை " யம்புகோள " என்றும், (யம்புகோவளம் = யம்புவிற்கான பெருவழி), அருகிலிருந்த புத்தபீடிகை கொண்ட தலத்தை " யம்புகோவள விகாரை " என்றும் கூறுகிறது[6]. இது நாகபுரம் என அழைக்கப்பட்ட கந்தரோடைக்கு மிகச் சமீபத்திலிருக்கும் துறைமுகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## 3. நாக நகர்

வடமத்திய மாகாணத்தில் கிடைத்த ஒரு தமிழ்ப் பிராமிக் கல்வெட்டில் " நாக நகர் " பற்றிக் கூறப்படுகிறது. இக் கல்வெட்டைப் பரிசீலித்த கலாநிதி இரகுபதி இந்த நாக நகர் கந்தரோடையைக் குறிப்பதாகக் கருதியுள்ளார்[7].

குடுமியாமலைக் கல்வெட்டில் வரும் " நாக நாடு " யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடஇலங்கையின் பரந்த பிரதேசத்தைக் குறிக்கிறது[8].

## 4. மணிநாக தீபம்

கி.பி பதினான்காம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட " சமதர்மலங்கார' " என்ற நூலில் கூறப்பட்டுள்ள ஒரு உபகதையில் இலங்கையின் தெற்குப் பகுதியான மகாமகத்திலிருந்து பறந்து வந்த ஓர் ஆண் காக்கைக்கும், வட பகுதியான மணிநாக தீபத்திலிருந்து வந்த ஒரு பெண் காக்கைக்கும் ஏற்பட்ட காதலும், திருமண நிகழ்வும் கூறப்படுகிறது[9].

" ராஜவானி " என்ற சிங்கள நூல் " மணிநாகதீப " புராதான யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற பௌத்த மையம் எனச் சொல்கிறது. இவற்றை ஆராய்ந்த கலாநிதி கொடகும்புரா மணி நாக தீப என்ற நகரம் பண்டைய கந்தரோடையே என உறுதிப்படுத்துகிறது.

## 5. பல்லவம் - மணிக்கரை

மணிபல்லவம் என்ற பதத்தை வல்லிபுரப் பிரதேசத்துடன் தொடர்பு படுத்தும் சான்றுகள் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் வல்லைப் பகுதியிலுள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயம் மிகவும் தொன்மையான கோயில். இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் திருமால் மேல் பாடப்பெற்ற வல்லைப் பதிகத்திலுள்ள

" திரைகடல் மடிமிசை பலவேலேந்தி,
தொடுவாய் தோண்டி நாவாயோட்டி,
பகைவனை யொழித்துப் பல்லவமீட்டி,
புஞ்சம் நல்கிப் பஞ்சம் போக்கி,
வல்லையம் பதியினி வாலயம் தோற்றி,
விண்ணவன் கார்முகில் வண்ணனை யேற்றி,
ஆயிரம் தலைவிரிப் பள்ளியான் தொழிஇ,
ஆழித் தேவன் தொண்டைமான் வாழி ! "

என்ற பாடலிலும்[11]

தொண்டைமானாறு செல்வச் சந்நிதிக் கந்தன் திருத்தலப் புராணத்தில் வரும் -

" பொன்னுயர் ஈழநாட்டில் பொருந்திய வடபால் யாழர்,
மன்னிய விந்து வாரி மணிக்கரை வந்து சேர,
உன்னிய செழுமையாற்றி ஒளி மயிலழகனாரின்
சொன்னல முழங்க ஓடும் தொழ வல்லியாறு சூழ்ந்தே "

என்ற பாடலிலும்[12] இடம்பெறும்

" பல்லவம் ", " மணிக்கரை " ஆகிய பதங்கள் வல்லைப் பகுதி உட்பட்ட மணிபல்லவத்தைக் குறித்து நிற்பதைக் காணலாம்.

## 6. பல்லவத்துறை - பல்லப்பை - பல்லதித்த

வரலாற்றுக் காலத்தில் வல்லிபுரம் யாழ்ப்பாணத்தின் அரச மையங்களுள் ஒன்றாகப் புகழ் பெற்றிருந்தது. ஒரு காலகட்டத்தில் நாகதீபத்தின் நிர்வாகம் வல்லிபுரத்தின் அரச நிர்வாகியிடம் இருந்ததையும் - வல்லிபுரம் " வடகரை ஆஸ்தானம் " என்ற பெயரால் வழங்கப்பட்டதையும் வல்லிபுரப் பொற்சாசனம் எடுத்துரைக்கிறது[13].

வல்லிபுர ஆஸ்தானத்தின் துறைமுகம் பல்லவத்துறை என அழைக்கப்பட்டது. வல்லிபுரத்திற்குச் சமீபமாக கடற்கரையோரமாக உள்ள - இன்று பல்லப்பை என்ற பெயர் கொண்ட கிராமம் பண்டைய பல்லவத்துறையின் பெயரைக் கொண்டிருக்கிறது.

அநுராதபுரத்தில் தனது அரசுரிமையை இழந்த அபய நாகன் (கி.பி 285 - 293) நாகதீபத்திற்குச் சென்று அங்குள்ள " பல்ல தித்த " துறைமுகத்திலிருந்து கடல் மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்ற சம்பவத்தை மகாவம்சம், சூளவம்சம் ஆகிய பாளி நூல்கள் எடுத்துரைக்கின்றன[14].

பாளி மொழியில் " தித்த " என்ற பதம் துறைமுகத்தைக் குறிக்கும். மாதோட்டம் துறையை பாளி இலக்கியங்கள் " மகாதித்த " என்றே குறிப்பிடுகின்றன[15]. இந்த அடிப்படையில் பல்லவத்துறை என்ற புராதான துறைமுகமே பாளியில் பல்லதித்த எனப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பல்லதித்த என்ற துறையை வல்லிபுரத்துடன் இணைத்துப் பார்ப்பதே பொருத்தமாக இருக்கும் எனப் பேராசிரியர் சிற்றம்பலம் கூறியிருப்பதும் இங்கே கவனிக்கத்தக்கது[16].

அன்றைய பல்லவத்துறையே - பல்லதித்தமே - இன்று பல்லப்பை என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது !

**Competitive Rates to All Countries A-Z**

**Fantastic rates - call Sri Lanka from 10p**

සීගිරි
சீகிரி
SIGIRI ™

enjoy
# home comforts
## with a **Sigiri*Home*** account
from Sri Lanka Telecom

**மலிவான விலை – தெளிவான ஒலி – விரைவான இணைப்பு**



***best prices - best connections - best quality***

**visit www.sigiri.net or call our hotlines on 0800 485 1110 (24 hours) or 020 7094 9494**

Sri Lanka Telecom

### 7. '' பல்லூர் '' பதித்த கந்தரோடைச் சாசனம்

சென்ற ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கிருஷ்ணராசா. கி.மு முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்குரிய தமிழ்ப்பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்ட பல்லூா் –பலூர் என்ற வாசகம் பதிக்கபட்ட புராதன மட்பாண்ட ஒடொன்றைக் கந்தரோடையில் கண்டுபிடித்தார்[17].

இச்சாசனத்தில் காணப்படும் பல்லூர் –பலூர் என்ற இடத்தை கலிங்க நாட்டில் உள்ள பலூருடன் தொடர்பு படுத்தி – அக்காலகட்டத்தில் கலிங்கத்துக்கும் கந்தரோடைக்குமிடையே நடைபெற்ற கடல் வர்த்தகம் பற்றி எடுத்துக் கூறப்பட்டது[18]. ஆனாலும், பல்லம் என்ற பெயரால் வழங்கப்பட்ட புராதான யாழ்ப்பாணத்தை இச் சாசனத்துடன் தொடர்பு படுத்துவதே பொருத்தமாக அமையும்.

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் மணிநாகபுரம், நாகபுரம் ஆகிய பதங்கள் குறிப்பாகக் கந்தரோடையையும், மணிக்கரை, பல்லவம் ஆகிய பதங்கள் வல்லிபுரத்தையும் சுட்டி நிற்பதைக் கண்டோம். சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட கந்தரோடை சாசனத்தில் பல்லூர் என்ற பெயர் பதிவாகியிருக்கிறது.இவற்றை ஆராயுமிடத்து கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய புராதன நகரங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தீபகற்பகத்தின் பெயரே மணிபல்லவம் என்பது உறுதியாகிறது. பல்லவபுரம் என்ற பெயர் கொண்ட புராதான நகரம் காலகதியில் வல்லிபுரமாகத் திரிபடைந்திருக்க முடியும்.

### அடிக்குறிப்பு

1. மணிமேகலை (உ.வே.சா. பதிப்பு) காதை 8 வரி 54; காதை 9 வரி 21, 58 ; காதை 24 வரி 54, 169 ; காதை 25 வரி 178.

   மகாவல்யத்தில் இடம்பெறும் ' ஜம்புதீப ' என்ற பதம் இந்திய கண்டம் முழுவதையும் குறிப்பிடுவதாக வில்ஹெம் கெய்கர் கருதுகிறார். Mahavamsa Ch 111 -13, foot note 5
2. Mahavamsa (Geiger Edition) : Ch 1 - 47
3. மணிமேகலை (உ.வே.சா பதிப்பு) : காதை 8 வரி 54 – 63.
4. தியாகராஜா, எஸ். வல்லிபுரப் பொற்சாசனம் : வீரகேசரி 09.11.03
5. மணிமேகலை (உ.வே.சா பதிப்பு) காதை 9 வரி 61 – 62 ; காதை 10 வரி 16 ; காதை 25 வரி 133, 134, 183 – 199.
6. Mahavamsa (Geiger Edition) : Ch XIX - 23, 28, 60
7. புஷ்பரட்ணம், ப: தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, சென்னை 2000 , பக் 176.
8. மே.கூ. நூல் பக் 177
9. Godakumbara, C : Kanterodai : Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol 12, 1968 ; P 71
10. மே. கூ. கட்டுரை பக் 71
11. முத்துக்குமாரு. வ: கட்டுவனூர்க்கவி : ஞானோதய சங்க வெள்ளி விழா மலர், சுன்னாகம் 1953
12. தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம் : ஸ்ரீதரன் பதிப்பு, திரு நந்தி, மல்லாகம் 1978.
13. Paranavitan. S: Vallipuran Gold Plate : Epigraphia Zeylancia Vol . IV, P 237
14. Mahavamsa (Geiger Edition) : Ch XXXIV- 43
15. Mahavamsa (Geiger Edition) : Ch VII - 58. See foot note 1
16. சிற்றம்பலம் சி.க : யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு; பக் 156
17. கிருஷ்ணராசா செ. : வழுக்கையாற்று வடிநிலம் வழங்கும் வரிவடிவங்கள் ; வீரகேசரி 14.03.2004
18. மே.கூ. கட்டுரை

♦♦♦

## வேதனையான சில விபரீதங்கள்

கருத்துகளில் மாறுபாடுகள் எழுத்துகளில் பிரதிபலித்தால் அதற்காண விளக்கங்களை அதே முறையில் அணுகுவதுதான் தாற்பரியம். அதைவிடுத்து ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்த பத்திரிகைகள் அலாக்காக தூக்கி குப்பைக் கூடைகளில் வீசப்பட்ட செய்தி கிடைத்தபோது வேதனையடையாமல் இருக்க முடியவில்லை. விம்பிள்டன் பிள்ளையார் ஆலயத்தில் ' ஒரு பேப்பர் ' இதழுக்கும், லூசியன் சிவன் கோவிலில் 'புதினம்' பத்திரிகைக்கும் இவ்வனுபவங்கள் ஏற்பட்டதாம். இதே அனுபவம் லூசியன் சிவன் கோவிலில் 'தமிழர் தகவலு'க்கும் ஏற்பட்டதுண்டு. ஒரு பத்திரிகையை எம் மத்தியில் உருவாக்குவதென்பதும் – தொடர்ந்து நடத்துவதும் இலேசான காரியமல்ல. ஒரு மனிதனின் உழைப்பை மதிக்க மறுத்தாலும் பரவாயில்லை – முகத்திலடிப்பது பண்பாகுமா? சில கோவில்களில் இப்படியான இலவச இதழ்கள் வைப்பதற்குக் கூட விசேட அனுமதி வேண்டுமாம். இறைவன்கூட இலண்டனில் எடுத்தார் கைப்பிள்ளைதானா? நன்றாகச் சிந்தியுங்கள்



முந்நாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு முத்திரை வெளியீடு சென்னையில் அண்மையில் நடந்தது

# பகைவனுக்கு அருள்வாய்

கவிஞர் வி.கந்தவனம்



## போவதா- விடுவதா?
## இதுதான் கேள்வி.

இது பரீட்சைக் கேள்வி இல்லை. வாழ்க்கை பிரச்சனைகளுடன் தொடர்பான கேள்வி. வாழ்க்கையிலும் பல பிரச்சனைகளை எதிரநோக்கி பெற்றி பெற்றவன் குமார். ஆனாலும் இந்தக் கேள்வி கடந்த இரண்டு கிழமைகளாக அவன் மனத்தைக் குழப்பிக் கொண்டிருக்கிறது.

மனக்குழப்பத்தை மாற்றுவதில் அவன் மனைவி சூசன் மிகுந்த கெட்டிக்காரி என்பது அவனுக்கு நல்லாகவே தெரியும். விடயத்தைச் சொன்னான். '' இந்த விடயத்தில் உங்கள் முடிவுதான் முக்கியமானது. யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். உங்கள் விருப்பமே எனது விருப்பமும் என்றாள் அவள்.

கணவன் விருப்பு வெறுப்புகளை அனுசரித்து நடப்பவள் சூசன். அதுபோலவே குமாரும் மனைவியின் அபிலாசைகளைப் பெரிதும் மதிப்பவன். இவ்வித பரஸ்பர புரிந்துணர்வும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுமே அவர்களின் காதல் வாழ்வின் மந்திர கீதங்கள் என்பதைப் பலர் அறியார்.

அறியாதவர்கள் அவர்களின் அப்பழுக்கில்லாக் காதலை ஆரம்ப காலத்தில் பகடி பண்ணியது கூட உண்டு.

'' உந்தக் காதல் எத்தனை நாளைக்கு? ''

'' குமாரை நட்டாற்றில் விட்டு விட்டு அவள் வேறு ஒருத்தரோடு கூடியிருக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. ''

'' வெள்ளைக்காரியள் நாகரிகமே வேறு. அவர்கள் பல ஆடவருடன் டேற்றிங் செய்கிறவர்கள் ''

'' எத்தனை தமிழ்ப் பெண்கள் இருக்க, உவன் ஏன்
வெள்ளைக்காரிக்குப் பின்னாலே திரியிறான்? ''

'' வெள்ளையை முடித்தால் கனடாவில் தனது அந்தஸ்துக் கூடும் என்று நினைக்கிறானோ என்னவோ? ''

இவ்வித பரிகாசங்களுக்கெல்லாம் எந்த உள்ளம் காரணமாக இருந்ததோ அந்த உள்ளம் கடிதம் அனுப்பியிருக்கிறது வரச் சொல்லி.

போவதா? விடுவதா?

விடை காண முற்படும்போதெல்லாம் பழைய நினைவுள் குமாரின் மனத்தில் படல்கட்டித் தடைசெய்தன.

பரிகாசங்கள், திட்டமிட்ட சதிகள் என்பனவற்றின் மத்தியில் குமார் – சூசன் காதல் தொடர்ந்து வளரவே செய்தது.

குமாரின் உள்ளத்தில் காதல் சுடரை ஏற்றியவளே சூசன்தான். ஒரே கம்பெனியில் நிதிப் பிரிவில் இருவரும் கணக்கு இலிகிதர்கள். அவன் ஒரு சக தொழிலாளி என்னும் உணர்வுடனேயே அவளுடன் பழகி வந்தான். ஆனால் அவனின் அறிவுத் திறனும் எடுப்பான தோற்றமும் சூசனின் உள்ளத்தில் துடிப்பை ஏற்படுத்தின. ஒருமுறை அவனின் பிறந்த திகதியை எப்படியோ அறிந்துகொண்டு பூக்கள் கொடுத்து சூசன் வாழ்த்தினாள்.

அன்றைக்குப் பிடித்தது அவனுக்கும் அந்த வருத்தம் – அவளையே சதா நினைக்கின்ற வருத்தம்.

அந்த வருத்தத்தை ஒரு நாள் அவளுக்குத் தெரிவித்தபோது அதற்கு மருந்து கொடுப்பதுபோல அவளும் '' நான் உன்னை உண்மையாகவே காதலிக்கிறேன் குமார் '' என்றாள்.

அவர்களின் உண்மைக் காதலை மாசுப்படுத்தப் பெய்தன பழிப்புரைத் தூறல்கள். எல்லாமே குமார் பக்கத்துச் சொந்தங்களின் நளினங்கள்தாம். அவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தவர் வேறு யாருமல்லர். அவனது தமக்கை கண்மணியும் கணவன் ஆனந்தனுந்தான். அவர்கள் குமாரின் காதலை முற்றாக எதிர்த்தனர். முளையிலேயே கிள்ளிவிட முனைந்தனர்.

'' மதம் மாறப் போகிறாயா? பண்பாட்டை அடைவு வைக்கப் போகிறாயா? மொழியை மறக்கப் போகிறாயா? உறவை முறிக்கப் போகிறாயா? குடும்பத்தையே குலைக்கப் போகிறாயா? ''

இப்படிக் கேள்விக்கு மேல் கேள்விகள். '' இல்லை இல்லை '' என்று கூறித் தகுந்த விளக்கங்களைக் கொடுத்தாலும் அவற்றை அவர்கள் கேட்பதாகவும் இல்லை. வஞ்சம் செய்பவர்களுக்குக் கேள்வி கேட்க எந்த அளவுக்குத் துணிவு இருக்கிறதோ அந்த அளவுக்கு பதிலைக் கேட்கப் பொறுமை இருப்பதில்லை.

மொட்டைக் கடிதங்கள்கூட சூசனுக்கு அனுப்பப்பட்டன, குமார் வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறான் என்று. நல்ல காலம், சூசன் உறுதியாகவே இருந்து விட்டாள்.

உண்மைக் காதலின் உயர்வை அறியாதவர் அதனைக் கொன்றொழிந்த கதைகள் ஏராளம். அவற்றுள் பல வாழும் இலக்கியங்கள் ஆகவும் விளங்குகின்றன. அம்பிகாவதி – அமராவதி, ரோமியோ – யூலியட் துன்பியற் காதல்கள் நல்ல உதாரணங்கள்.

உதாணங்கள் இருந்தும் என்ன? பகுத்தறிவற்றவர்கள் நல்ல உதாரணங்களால். உள்ளொலி பெற்ற சம்பவங்கள் மிகவும் குறைவே.

எனினும் அம்பிகாபதியும், ரோமியோவும் வாழ்ந்த காலங்களில் காதல் தளம் விட்டுத் தளம் தாவக் தடைகள் இருந்தன. காதல் சக்தி வாய்ந்த ஓர் உறவாயினும் காதலர்கள் சக்தியற்றவர்களாகவே இருந்த காலம் அது.

இன்று நிலமையே வேறு. அதுவும் கனடா காதலர் சொர்க்கம். கனடியச் சுதந்திரம் குமார் – சூசன் காதலைத் திருமணமாக்கியது.

சூசன் பெற்றோர் சாயி பக்தர்கள். மகளின் திருமணத்தைச் சாயி பக்தர்கள் முன்னிலையில் மிக எளிமையாக முடித்து வைத்தனர். திருமணத்துக்கு குமாரின் பெற்றோர், தமக்கை குடும்பம் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் எவரும் வரவில்லை.

அக்கா கண்மணியும் அத்தான் ஆனந்தனும் வரமாட்டார்கள் என்பது குமாருக்குத் தெரிந்த சங்கதிதான். ஆனால், பெற்றோர் எப்படியும் வருவார்கள் என்று கடைசி வரைக்கும் நம்பியிருந்தான். அவர்களும் வரவில்லை. அதனை அவனால் மறக்க முடியாது.

குமாரின் பெற்றோர் மகள் – மருமகன் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் திருமணத்துக்கு வராது நின்று விட்டனர். மற்றும்படி குமாரின் காதலுக்கு அவர்கள் எவ்விதத்திலும் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் அல்லர்.

குமாரின் ஆறு வயதுப் பெண் குழந்தைக்குத் தாய்வழி உறவு வளர்ந்த அளவுக்குத் தந்தைவழி உறவு வளரவில்லை. ஏழு வருடங்கள் குமாருக்கும் பெற்றோர், சகோதரி குடும்பங்களுக்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை.

இரண்டு வாரங்களுக்குமுன் கண்மணியிடமிருந்து வந்த கடிதம் ஒன்று மீண்டும் தொடர்பை ஏற்படுத்தியிருக்கிறது. தமக்கைக்கு முதல் இரண்டும் பெண் குழந்தைகள். மூன்றாவது ஆண் குழந்தை. அதன் முதலாண்டுப் பிறந்ததின வைபவத்துக்கு வருமாறு குமாரையும் குடும்பத்தையும் அழைத்திருக்கிறாள் தமக்கை.

மனமாற்றத்துக்குக் காரணம் என்னவாக இருக்கலாம்.

அன்று மாலை சூசனின் பெற்றோர் வந்திருந்தனர். பேச்சோடு பேச்சாகக் கனகாலத்திற்குப் பிறகு கண்மணியிடமிருந்து வந்த கடிதம் பற்றியும் அவர்களுக்குத் தெரிவித்தான்குமார். போவதா? விடுவதா? என்று ஆலோசனை கேட்டான்.

மாமனார் சொன்னார்:

'' அவர்களது மனமாற்றத்துக்கு காரணம் ஒன்று இருப்பதுபோலத் தெரிகிறது. நான் பணியாற்றும் கம்பெனியில் கணினித் தகவல் சேவையில் இடம் ஒன்று காலியாக இருக்கிறது. விண்ணப்பங்கள் கோரி விளம்பரம் செய்திருந்தோம். ஆனந்தனும் அந்தப் பதவிக்கு விண்ணப்பித்திருக்கிறார். விண்ணப்பத்திலிருந்து அவர் இப்பொழுது வேலை இல்லாமல் இருப்பது தெரிகிறது. நியமனக் குழுவில் நானும் அங்கம் வகிக்கின்றேன் என்றாலும் படிப்புத் தகைமைகள், அனுபவங்கள், சாதனைகள் என்பன யாருக்கு அதிகம் உள்ளனவோ அவருக்கே நியமனம் வழங்கப்படும். நான் சாயி பக்தன். குறுக்கு வழியில் எதையும் செய்ய விரும்புவதில்லை என்பது உங்களுக்கு தெரியும். எல்லாம் அவரவர் கர்மாவின் படி நடைபெறும். ''

'' நீங்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுடன் உறவை வளர்ப்பதே நல்லது. உங்களிடம் நிறையவே தன்னம்பிக்கை இருக்கிறது. தன்னம்பிக்கையே ஒருவனின் வலுவான ஆயுதம். இந்த ஆயுதம் இருக்கும் வரை உங்களை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. உங்கள் காதலைப் பலர் முறியடிக்க முனைந்தனர். வெற்றி பெற்றார்களா? இல்லை. ஏனென்றால் உங்களினதும் சூசனினதும் தன்னம்பிக்கை அவர்களைத் தோற்கடித்து விட்டது. வெற்றி தோல்வி என்பனவும் வினைப்பயன்கள்தாம். ''

'' உங்கள் தன்னம்பிக்கை கடவுளின் பரிசு. தன்னம்பிக்கை உள்ளவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். ஆனால், அஞ்சாமை தலைக்கனமாக மாறலாகாது. நீங்கள் போவதால் உங்களுக்கு எந்தவிதத் தீங்கும் வரப்போவதில்லை பகைவனுக்கும் அருள்வாய் என்கிறது பகவத் கீதை. நடந்தவை கெட்ட கனவுகள் ஆகட்டும். மனம் நல்லனவற்றின் களஞ்சியம். அதில் கெட்ட நினைவுகளுக்கு இடமில்லை. போவதே நல்லது. ''

குமாருக்குத் தெளிவு பிறந்தது. அவனைக் குழப்பிக் கொண்டிருந்த கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது.

பிறந்தநாள் கொண்டாட்டத்துக்குக் குமார் குடும்பத்துடன் சென்றான். ஸ்காபரோவில் உள்ள ஈஸ்ரவுண விருந்தகத்துக் கீழ்மண்டபம் களைக்கட்டிக் கொண்டிருந்தது. அலங்காரங்களில் ஆங்கில நாகரிகம் கொலுவிருந்தது. சோடனை பலூன்களைப் போலவே எல்லோர் முகங்களும் பூரிப்பால் ஊதியிருந்தன. அழைக்கப்பட்டவர்கள் இன்னமும் வந்துகொண்டிருந்தனர்.

மண்டப வாயிலில் சூசன் காலடி எடுத்து வைத்ததும் எல்லோர் கவனமும் அவள் பக்கம் திரும்பியது. அவள் அசல் தமிழ் பெண்ணைப் போலச் சேலை உடுத்திப் பொட்டுப் போட்டிருந்ததுதான் காரணம். வெள்ளைக்காரக் கோலத்தில் அங்கு வந்திருந்த இளந்தமிழ்ப் பெண்கள் பலரின் கண்கள் அகல விரிந்தன.

ஆனத்தனின் குற்றமுள்ள மனத்தை முகம் பூசி மெழுகியது. பண்பாட்டைப் பற்றி முன்னர் கேள்வி கேட்ட கண்மணியின் கண்கள் கூசிக் குறுகின.

வாசலுக்கு வந்து ஆனந்தன், குமாரின் கைகளைக் குலுக்கி வரவேற்றாள். சூசனைப் பார்த்து '' ஹாய் '' சொன்னாள் கண்மணி.

'' வணக்கம் '' என்று கை கூப்பினாள் சூசன்.

பக்கத்தில் நின்ற குமாரின் பெற்றோரின் சுருங்கிய சொக்குகள் விரிந்து மலர்ந்தன. '' சுகமாய் இருக்கிறீர்களா? '' என்று சூசன் அவர்களைத் தமிழில் கேட்டபொழுது ' மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே ' என்ற உணர்வு அவர்களைப் புல்லரிக்கச் செய்தது.

இவ்வளவு அன்பான குரலில் அவர்களை இருவரை யாரும் கனடாவில் சுகம் விசாரித்தது கிடையாது.

நன்றி : அது வேறுவிதமான காதல்


Voice Telecom
international calling cards...
for Asia
<<< and other parts of the world
<<< Europe and U.S.A.
<<< for all parts of Africa
<<< Middle East
<<< Eastern Europe
and for Sri Lanka >>>
SALES ENQUIRY
CANADA 416 285 9758
DENMARK 80 70 17 67
FRANCE 08 05 30 05 20
GERMANY 069 2400 7860
NETHERLANDS 0800 020 1631
NORWAY 800 58 180
PORTUGAL (0034) 91 291 0096
SPAIN 901 666 052
SWEDEN 020 1401 162
UK 0800 635 6 635
www.voicetelecom.com
NO line rental.... NO hidden charges.... NO calling cards
VOICE-DIRECT HOME ACCOUNT
...the convenient option
for calling anywhere you want...
from your home...
or where ever you are
with...
to open an account just DIAL....
0800 519 4 519
OR 0207 177 22 00
YOU CAN ALSO OPEN AN ACCOUNT ONLINE BY VISITING OUR WEBSITE:
www.voice-direct.com





## செல்வன் நிலக்ஷன்

தமிழர் தகவல் நடத்திய திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றி பெற்ற முதல் மாணவன். இலண்டன் தமிழ்க் குழந்தைகளுக்கு இவர் ஒரு முன்மாதிரி. நிலக்ஷன் எதிர்காலம் மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம். இவருக்குரிய பரிசும், சிறப்புச் சான்றிதழும் விரைவில் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## இளைய கானக்குயில் 2004

இலண்டன்
கிரீன்போல்ட் மண்டபத்தில்
9.10.2004 மாலை 5 மணிக்கு
நடைபெறும்.
தொடர்புகட்கு : 020 8390 5823





## 2005ம் ஆண்டிற்கான பிரித்தானியத் தமிழர் தகவல் ஏடு முரசம்

வழமைபோல் தேசிய நினைவெழுச்சி நாளன்று வெளியிடப்படவுள்ளது. தனித்துவம் வாய்ந்த

அகரவரிசைத் தொகுப்பு, அகரவரிசைப் பொருளடக்கம் ஆகியவற்றுடன் சிறப்பாக வடிவமைக்கப்படும் தகவல் பக்கம், சிறப்பு வர்ணப்படங்கள் கொண்ட தமிழ் வர்த்தக சமூக சேவை நிறுவனங்களின் விபரங்கள், விளம்பரங்களுடன் மேலும் பல பயன்தரு தகவல்களுடன் வெளிவரும் முரசம் 2005க்கான தயாரிப்பு வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. உங்கள் விபரங்கள், விளம்பரங்கள் இடம்பெறத் தொடர்பு கொள்ளுங்கள்.

முன்பக்க அட்டை, விளிம்பு, உள்பக்க அட்டை விளம்பரங்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு : தொலைபேசி 020 8665 2751

email : info@murasam.com
web : murasam.com

# பகையே சீண்டாதே

வந்து பிறந்தோம்
நொந்தே மடிந்தோம்,
வரலாறாய்
ஏது செய்தோம் ?
பாதியில் பகைவன்
பறித்து விட – மீதியாய்
உயிர் மட்டும் !
ஊமைகளாய்
அழுதிருந்தோம் !
யார் வந்தார்
ஏன் என்று கேட்க !
நடை பிணமாய்
நாமிருக்க,
துரோகிகள்
வழி காட்ட – வந்து
இறங்கியது –
அயல் நாட்டுப்படையும்
எமக்கே குழிபறிக்க !
வீரிட்டு அழுதிடும்
எம்மினம் – வீரமிகு
தமிழினம் ! எம்
பலம் உணர்த்திட,
கரிகாலன் சேனை
பொங்கி எழுந்திட ;
நொறுங்கிப் போனது
வல்லரசுப் படை !
மண் குதிரை நம்பி
குளம் இறங்கிய கதையாய்
சிங்களம்
திகைத்தது !
சேனை சேனையாய்
நீ வரினும்
நாங்களும்
போர்க்களம்
வருவோம் ! – சபதம்
எடுத்த எம்
தாய் குலம்
சரித்திரத்தில் இன்று
முதலிடம் !
பயங்கர வாதமென
பறை சாற்றிய பகைவன் – இன்று
பகிரங்கமாய் சமாதான
கதவுகளை தட்டுகிறான் !
ஏன் பகைவா !
எம்மிடம் தோற்றுப்
போய் விடுவாய்
என்ற பயமா ? – இல்லை
எம்மை தேற்றுவதாய்
நாடகமா ? – உலக
அரங்கில்
உன் உண்டியல்
நிரப்பிட, – உன்
பக்தர்கள்
இங்கு எம்
உயிர் பறிப்பதா ?
வெள்ளைக் கொடியின்
கீழ்
எமக்கு புதைகுழிகளா ?
வேண்டாம்
எமக்கு இந்த சமாதானம் .....
கொடூர கொலைகள் தான்
உன் அகராதியில்
சமாதானம் என்பதா ?
பகைவனே !
மார்பினில்
குத்திப்பார் – புரிவாய்
புலி வீரம் !
கொடூரமாய்
முதுகினில் குற்றி,
தூங்கிக் கிடக்கும்
புலியினை சீண்டாதே ! –
மீண்டுமோர் யுத்தம்
தேடி இனியும்
அலையாதே ..... ! ! !

– ஈ. தமிழி

..... வாசகர் கடிதம் .....

அன்புமிக்க

தமிழர் தகவல் தமிழ்காவிக்கு – அட்டைப்படம் திரு. நடேசன் அவர்களின் நிழல்படத்தைத் தாங்கி வந்தது, ஒரு கறுப்பு யூலை தமிழுக்கு அழிவு இல்லை என்பதைத் தமிழர் தகவல் அடித்துரைத்திருக்கிறது.

கடைசிப் பக்கம் முதல் பக்கத்தில் வந்திருக்க வேண்டும். ஒரு அருமையான தகவலைத் தமிழருக்கு தமிழர் தகவல் தந்திருக்கிறது. ஆசிரியருக்குப் பாராட்டு.

முக்கியமாக ஆசிரியருக்கு – தியாக திலீபனின் தொடர் முடிந்து விட்டது கடந்த இதழ்களில் ஒரு சிறு ஏமாற்றம். இனி எடு புதிய மாவீரனை அவன் வீரத் தியாகங்களை, வரலாற்றை எமக்குத் தருவீர்களா ?

நாங்கள் மிகுந்த ஆவலுடன் .....................

தங்கள் உண்மையுள்ள
எஸ்.கே. மைக்கல்

ஐயா

தமிழர் தகவலை தவறாது வாசிக்கிறேன். தென்கச்சி சுவாமிநாதனை தங்கமுளை சுவாமிநாதன் என்று மாற்றுங்களேன். உங்கள் ஆசிரிய தலையங்கத்தில் இதுவரை தெரியப்படாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்த தலைவர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி தெரிந்து கொண்டோம். எம்மைப் போன்ற குழந்தைகளுக்கு கடந்த கால உண்மை வரலாறுகளை உணர்த்துகிறீர்கள். தொடர்ந்து இது போன்ற அரிய உண்மைகளை எமக்குப் படிக்கத் தாருங்கள். நன்றி

19.08.2004

தங்கள் உண்மையுள்ள
முல்லை அபிராமி
கொழும்பு

## இம்மாதம் இப்படித்தான் செப்டம்பர் 2004

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

### மேடம் : (அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம்)



சுறுசுறுப்பானவர்களே ! சுக்ரபலம் சிறப்பாக இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி, சுபகாரியங்கள் முன்னின்று நடத்துதல், போட்டிகளில் வெற்றி, உல்லாசப் பயணங்கள், வீடு, வாகனம் சேர்க்கைகள் என நல்ல பலன்கள் நடக்கும். நெருப்பு கிரகங்கள் ஒன்று சேர்ந்திருப்பதால் பிள்ளைகளின் படிப்பு, ஆரோக்யம் இவற்றிற்காக விரையங்களும் செலவுகளும் ஏற்படும். அவசர முடிவுகள் எடுக்காமல் நிதானமாக செயல்படுவது நல்லது. பூர்வீகச் சொத்தில் மாற்றம் செய்வீர்கள். பழைய சொத்தை விற்று புதுசு வாங்குவீர்கள். வயிற்றுக் கோளாறு, தொண்டைவலி வந்து போகும். உணவில் காரம், கொழுப்பைத் தவிர்க்கவும். சகோதரவகையில் அலைச்சல், செலவு வந்து போகும். காரசாரமான விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் பற்று வரவு மாதத்தின் பிற்பகுதியில் நன்றாக இருக்கும். அரசு விவகாரங்களில் அவசர முடிவுகள் தவிர்க்கவும். பங்குதாரர்களிடையே கருத்து வேறுபாடுகள் வந்து மறையும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கூடும். உத்யோகத்தில் சில கூடுதல் சலுகைகள் கிடைக்கும். எதிரிகளை வீழ்த்துவீர்கள். ஷேர், லாட்டரி லாபம் தரும். கன்னிப் பெண்களின் புது முயற்சிகள் வெற்றி பெறும். மாதவிடாய்க் கோளாறு, அடிவயிற்றில் வலி வந்துபோகும். மாணவர்கள் மறுமலர்ச்சி பெறுவார்கள். சறுக்கல்கள் சவால்களை சமாளித்து சாதிக்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 19, 20, 21ந்தேதி காலை மணி 9.32 வரை நிதானம் தேவை. ராசியான எண்கள் : 1, 9. இராசியான நிறங்கள் : மஞ்சள், மெரூன்

### இடபம் : (கிருத்திகை 2, 3, 4ம் பாதம்,ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள்)



மதி நுட்பம் உள்ளவர்களே ! உங்களை உதாசீனப் படுத்தியவர்களெல்லாம் இப்போது உபசரிப்பார்கள். கடன் காரர்களைக் கண்டு இனி பதுங்க வேண்டாம். அம்மாவின் உடல் நிலை மாதப் பிற்பகுதியில் சீராகும். சொன்ன சொல்லை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதி பெருகும். எதிர்ப்புகள் விலகும். ஆடை, ஆபரணம் சேரும். சுபகாரிங்களை எடுத்து நடத்துவீர்கள். மகான்கள், அரசியல்வாதிகளை சந்திப்பீர்கள். கணவன், மனைவிக்குள் வாக்குவாதம் விலகும். வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் வரும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். வரவேண்டிய பணம் வந்து சேரும். வெளி வட்டாரம் இனிக்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் தனிப்பாதையில் சென்று லாபம் சம்பாதிப்பீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் எதிர்ப்புகள் அடங்கும். கிடைக்க வேண்டிய சலுகைகள் வந்து சேரும். புது வாய்ப்புகள் கதவைத் தட்டும். மாணவர்கள் கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவார்கள். கல்வியிலும் முதலிடம் பிடிப்பார்கள். கன்னிப் பெண்களின் நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். எங்கும் எதிலும் வெற்றி பெரும் காலமிது.

சந்திராட்டம தினங்கள் : 21ந்தேதி காலை மணி 9.33லிருந்து 22, 23ந் தேதி காலை 10.30 வரை. இராசியான எண்கள் : 3, 4. இராசியான நிறங்கள் : ஊதா, வெள்ளை

### மிதுனம் : ( மிருகசீரிடம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதங்கள்)



விகடகவியாளர்களே ! பேச்சில் சாதுர்யம் கூடும். ஆடை, அணிகலன்கள் சேரும். சகோதரி உதவுவார். சகோதரரால் அலைச்சல் ஏற்படும். தாயின் உடல்நலம் சீராகும். இடம் மாற்றம் ஏற்படும். வாகனத்தில் செல்லும் போது கவனம்தேவை. வயிற்றுவலி, நெஞ்சுவலி வந்துபோகும். உணவில் காரம், உப்பு குறைக்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். உறவினர்களால் தம்பதிகளுக்குள் சின்னச்சின்ன வாக்கு வாதங்கள் வந்து போகும். சொத்து விவகாரங்களில் நிதானம் தேவை. அரசு விவகாரங்கள் உடனே முடியும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. வேற்று மதத்தினர், மொழியினர் உதவுவார்கள். புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்ல வேண்டாம். ஏற்றுமதி, இறக்குமதி, ரசாயன, உணவு வகைகள் லாபம் தரும். உத்யோகத்தில் உயரதிகாரிகள் பாராட்டுவார்கள். கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும். சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுங்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள். கன்னிப் பெண்களின் காதல் கனியும். கல்வியில் முன்னேற்றம் உண்டு. அறைகுறையாக நின்ற காரியங்கள் நிறைவடையும் நேரமிது.

சந்திராட்டம தினங்கள் : 23ந்தேதி காலை மணி 10.30லிருந்து, 24, 25 மதியம் மணி 3.17 வரை. இராசியான எண்கள் : 5, 6. இராசியான நிறங்கள் : கிரே, கிளிப்பச்சை

### கடகம் : (புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)



கள்ளங்கபடமில்லாதவர்களே ! ராசியிலேயே சுக்ரன் நிற்பதால் அழகு ஆயுள் கூடும். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. ஆனால் சின்ன சின்ன விஷயத்திற்கெல்லாம் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதைத் தவிர்க்கவும். நிர்வாகத்திறன் கூடும். புது நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். மன உளைச்சல் நீங்கும். பிள்ளைகளின் கல்வி, உத்யோக, திருமண வகைகளில் மாதத்தின் பிற்பகுதியில் முன்னேற்றம் உண்டாகும். கற்பனை வளம் சிறக்கும். விருந்தினர் வருகை கூடும். சுப விரையங்கள் அதிகமாகும். வழக்குகள் சாதகமாகும். பார்வைக் கோளாறு, தலைசுற்றல் வந்து செல்லும். சொந்த ஊரிலிருந்து நல்ல செய்திகள் வரும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. வியாபாரத்தில் பற்று வரவு உயரும். பழைய சரக்குகள் விற்கும். பாக்கிகள் வசூலாகும். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். உத்யோகத்தில் உயரதிகாரி உங்கள் திறமைக்கு சவாலாக சில வேலைகளை ஒப்படைப்பார். பதட்டமில்லாமல் செய்து முடிப்பது நல்லது. சலுகை கிடைக்கும். மாணவர்களின் எழுத்தாற்றல் அதிகமாகும். விளையாட்டில் வெல்வார்கள். கன்னிப் பெண்களுக்கு உயர்கல்வி, காதலில் வெற்றியுண்டு. இலக்கை எட்டும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 25ந்தேதி மதியம் மணி 3.17 முதல் 26, 27ந்தேதி வரை. இராசியான எண்கள் : 6, 9. இராசியான நிறங்கள் : சிவப்பு, வெள்ளை

### சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



சிந்தனைச் சிற்பிகளே ! பயணங்கள் அடுத்தடுத்து வரும். பிரபலங்களின் நட்பு கிட்டும். பேச்சில் வேகமும் நிதானமும், அனுபவமும் வெளிப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. ஆரோக்யமான விவாதங்கள் வந்து போகும். பணம் எதிர்பார்த்தபடி வரும். ஏமாற்றியவர்கள் மனம் மாறுவார்கள். எதிரிகளுக்கு தக்க பதிலடி தருவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். உடல்சூடு அதிகரிக்கும். காய், கனிகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது. சகோதர வகையில் செலவுகள் உண்டு. பிள்ளைகளை அவர்களின் போக்கில் விட்டுப் பிடிப்பது நல்லது. விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வந்து சேரும். வெளி வட்டாரத்தில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் மந்த நிலை மாறும்.

உங்களின் நல்ல அணுகுமுறையை விரும்பி பல வாடிக்கையாளர்கள் வருவார்கள். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். உத்யோகத்தில் இழந்த சலுகைகளைப் பெறுவீர்கள். வதந்திகள் விலகும். சம்பளம் கூடும். மாணவர்களின் பேச்சுத்திறன் அதிகரிக்கும். கணிதப் பாடத்தில் மதிப்பெண்கள் கூடும். கெட்ட நண்பர்களை விலக்குவீர்கள். கன்னிப் பெண்களுக்கு கல்யாணத்தடை நீங்கும். குழப்பம் நீங்கி குதூகலமடையும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 1, 2 தேதிகள் மற்றும் 28, 29 தேதிகளில் நிதானம் தேவை. இராசியான எண்கள் : 1, 4. இராசியான நிறங்கள் : நீலம், ஆரஞ்சு

**கன்னி** : (உத்திரம் 2, 3, 4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2ம் பாதங்கள்



காரியத்தில் கண்ணாக இருப்பவர்களே ! உங்களின் பணத் தட்டுப்பாடு குறையும். ஓரளவு பணவரவு அதிகரிக்கும். வாகன வசதி பெருகும். உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வார்கள். விருந்தினர் வருகை கூடும். மனைவியின் உடல் நிலை சீராகும். மனைவி வழி உறவினர்கள் உதவுவார்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். போட்டிகளில் பரிசை வெல்வார்கள். வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். எதிர்ப்புகள் குறையும். அவ்வப்போது முன்கோபம், தூக்கமின்மை, சலிப்பு வந்து போகும். தியானம் செய்வது நல்லது. அதிகப் பேச்சு, அத்து மீறலான பேச்சுகளைத் தவிர்க்கவும். அரசு காரியங்களில் கவனம் தேவை. லாட்டரி லாபம் தரும். வெளிவட்டாரம் சுமாராக இருக்கும். தலைவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகள் பலமாக இருந்தாலும், புது வியூகங்கள் அமைத்து லாபம் ஈட்டுவீர்கள். வியாபார ரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். உத்யோகத்தில் வீண் பழிகள் விலகும். வேலைப் பளு குறையும். சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகவும். மாணவர்கள் விளையாட்டின்போது கவனமாகச் செயல்படுவது நல்லது. கன்னிப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். ஆழ்ந்து சிந்தித்து செயல்படுவது நல்லது.

சந்திராட்டம தினங்கள் : 3, 4 தேதிகள் மற்றும் 30ந் தேதியில் கவனம் தேவை. இராசியான எண்கள் : 6, 8. இராசியான நிறங்கள் : வெளிர் நீலம், வெள்ளை

**துலாம்** : (சித்திரை 3, 4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்கள்



தாராள மனசும், தன்னம்பிக்கையுமுள்ளவர்களே ! இடைவிடாது புதுமுயற்சியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும் என்றாலும் மனைவிக்கு தலைசுற்றல், மூட்டுவலி வந்து போகும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். எதிரிகளை வீழ்த்துவீர்கள். வழக்குகள் சாதகமாகும். உறவினர்கள், நண்பர்களின் வருகை அதிகரிக்கும். லேசாக சளித்தொந்தரவு, தொண்டை வலி வந்து போகும். உடன் பிறந்தவர்களால் அலைச்சல் ஏற்படும். வீட்டில் சுப காரியம் நடக்கும். அரசு விவகாரங்கள் உடனே முடியும். மகான்களின் ஆசி உண்டு. புது முயற்சிகள் யாவும் படிப்படியாக வெற்றி பெறும். புது வியாபார முயற்சிகளும் லாபம் தரும். கூட்டுத் தொழில் லாபம் தரும். பங்குதாரர்களிடையே கருத்து மோதல் விலகும். அயல் நாட்டிலுள்ளவர்கள், அன்னிய மதத்தினர்கள் மூலம் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் உங்களை வீழ்த்த நினைத்தவர்களை வெற்றி காண்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும். ஆசிரியரின் அன்பை பெறுவீர்கள். கன்னிப் பெண்களுக்குப் புது நண்பர்கள் உதவுவார்கள். நிதிநிலை சீரடையும் தருணமிது.

சந்திராட்டம தினங்கள் : 5, 6, 7ந்தேதி மதியம் மணி 2.34 வரை. இராசியான எண்கள் : 1, 3. இராசியான நிறங்கள் : ஆரஞ்சு, கிரீம் வெள்ளை

**விருச்சிகம்** : (விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)



பொதுவுடமைவாதிகளே ! அட்டமத்துச் சனி உங்களை அவ்வப்போது அலைகழித்துக் கொண்டிருந்தாலும் மற்ற கிரகங்களின் உறுதுணையோடு இந்த மாதத்தில் முன்னேறுவீர்கள். பயம், எதிர்ப்பு, நோய் விலகும். பணத்தட்டுப்பாடு தீரும். குடும்ப வருமானம் உயரும். முன்கோபம் குறையும். முகமலர்ச்சி உண்டாகும். பிரச்சனை தந்தவர்கள் பின்வாங்குவார்கள். வழக்குகள் சாதகமாகும். பிரிந்திருந்த தம்பதியினர் ஒன்று சேர்வார்கள். உறவினர்கள், நண்பர்கள், உங்களைப் புரிந்து கொள்வார்கள். பிள்ளைகளிடம் பாசமழை பொழிவீர்கள். ஆடை ஆபரணம் வந்து சேரும். அரசியல் தலைவர்கள், ஆன்மீகவாதிகள் உதவுவார்கள். வாகனத் தொல்லை விலகும். கல்யாணத்தடை , மன இறுக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் விலகும். புது வியாபாரம் தொடங்குவீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் செல்வீர்கள். வரவேண்டிய பணம் வரும். ஏற்றுமதி, இறக்குமதியில் லாபம் வரும். பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். வேலையாட்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்யோகத்தில் உங்களின் ஆதிக்கம் ஓங்கும். மூத்த அதிகாரிகளின் உதவி உண்டு. சக ஊழியர்களிடம் நிலவிய கருத்து வேறுபாடுகள் மறையும். மாணவர்கள் பரபரப்பாகச் செயல்படுவார்கள். ஞாபக சக்தி நிறையும். கன்னிப் பெண்களின் நீண்ட நாள் பிரச்சனைக்கு இப்போது தீர்வு கிடைக்கும். மறுமலர்ச்சி மலரும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 7ந்தேதி மதியம் 2.34 முதல் 8, 9ந்தேதிகளில் கவனம் தேவை. இராசியான எண்கள் : 4, 9. இராசியான நிறங்கள் : பிரௌன், ரோஸ்

**தனுசு** : (மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்)



தமிழ் மறவாதவர்களே ! ஆதித்யனின் ஆதிக்கம் சிறப்பாக இருப்பதால் இந்த மாதத்தில் தடைகளைத் தாண்டி சாதிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. எதிரிகளை வீழ்த்துவீர்கள். வீண் குழப்பம் விலகும். உறவினர்கள், நண்பர்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் மறையும். கோபம் குறையும். மனைவியின் உடல்நலம் சீராகும். உங்களுக்கு வயிற்று வலி, தூக்கமின்மை வந்துபோகும். மனைவி வழி உறவினர்களுடன் நிலவிய கசப்புணர்வு மாறும். தொலை தூரப்பயணங்கள் நிம்மதி தரும். வாகனத் தொந்தரவு விலகும். பெரிய பதவியிலிருப்பவர்களின் நட்பு கிட்டும். உல்லாசப் பயணங்களும் சென்று வருவீர்கள். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். திருவிழாக்களில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் முடக்கம் நீங்கும். வரவேண்டிய பணம் வரும். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். ரசாயணம், மருந்து, எலக்ட்ரானிக்ஸ் வகைகள் அதிக லாபம் தரும். அரசாங்க சலுகைகள் உண்டு. உத்யோகத்தில் நெருக்கடி தந்தவர்கள் நீக்கப்படுவார்கள். பரிசு கிட்டும். மாணவர்களின் நினைவாற்றல் கூடும். கன்னிப் பெண்களின் உயர்கல்வி தடை விலகும். காதல் இனிக்கும். தொல்லைகள் தொலைந்து மகிழ்வுறும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 10, 11, 12ந்தேதி நண்பகல் 12.10 வரை. இராசியான எண்கள் : 1, 9. இராசியான நிறங்கள் : மெரூன், ஊதா

**மகரம்** : உத்திராடம் 2, 3, 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள்)



மனிதாபிமானத்துடன் எதையும் செய்பவர்களே ! அடுத்தடுத்து பண இழப்புகள், அலைச்சல்கள், உடல் நலக் குறைவுகள் ஏற்படும். மாதத்தின் பிற்பகுதியில் மன அமைதி, பணவரவு, உல்லாசப் பயணங்களெல்லாம் வந்தமையும். நெருப்பு கிரகங்கள் எட்டில் அமைந்துள்ளதால் விபத்து வந்து போகும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்திலும் கடுமையான வாக்கு வாதங்கள் வந்து போகும். மற்றவர்களை வெளிப்படையாக விமரிசிக்க வேண்டாம். அரசு விவகாரங்களில் தொடர் கவனம் தேவை. காரம், கொழுப்புணவுகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல்நலம் இனி சீராகும். பிதுர் ராஜ்ஜிய

சொத்துக்கள் வந்து சேரும். பிள்ளைகள் ஆரோக்கியமடைவார்கள். உறவினர்களிடையே போட்டி, பொறாமை வந்து போகும். யாரையும் நம்பி பணம் வாங்கித் தர வேண்டாம். நண்பர்களிடம் குடும்ப விஷயங்களைச் சொல்ல வேண்டாம். வியாபாரத்தில் மாதத்தின் பிற்பகுதியிலிருந்து லாபம் வரும். பங்கு தாரர்களிடையே போட்டிகள் வெடிக்கும். புது முதலீடுகள் தவிர்க்கவும். உத்யோகத்தில் சவால்களை சந்திப்பீர்கள். இறுதி வெற்றி உங்களுக்குத்தான். கன்னிப் பெண்கள் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கற்பனையில் மூழ்க வேண்டாம். மாணவர்களின் விளையாட்டுத்திறன் கூடும். பொறுத்தால் வெல்லலாம்.

சந்திராட்டம தினங்கள் : 12ந்தேதிநண்பகல் 12.10லிருந்து 13, 14 தேதிகளில் நிதானம் தேவை. இராசியான எண்கள் : 3, 8. இராசியான நிறங்கள் : மஞ்சள், நீலம்

**கும்பம்** : (அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள்)



பழமையுடன் புதுமையைக் கலந்து புரட்சி செய்பவர்களே! சூரியனும் புதனும் உதவினாலும், சுக்ரன் பலவீனமாக இருப்பதால் பணத்தட்டுப்பாடு வரும். இனந்தெரியாத மனக் கவலைகள் வந்து போகும். மனைவியின் உடல்நலம் பாதிக்கும். நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் உங்களை வேறு மாதிரி புரிந்து கொள்வார்கள். வீடு, நிலம், வாகனம் வாங்குவதில் விற்பதில் மிகவும் கவனமாகச் செயல்படவேண்டும். யாருக்கும் கையெழுத்திட வேண்டாம். சிறு சிறு விபத்துக்கள் ஏற்படக்கூடும். தொண்டை, கழுத்து, காதில் வலி வந்து போகும். அரசு அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் உதவுவார்கள். தியானம் கை கொடுக்கும். அனாவசிய ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. மறைமுக எதிர்ப்புகள் வலுவடையும். வழக்குகளில் கவனம் தேவை. வியாபாரம் சுமாரான லாபத்தைத் தரும். புது முதலீடுகள் தவிர்க்கவும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்ல வேண்டாம். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. உத்யோகத்தில் நிதானமாக இருங்கள். அவசர முடிவுகள் வேண்டாம். மாணவர்களின் பொது அறிவு வளரும். கன்னிப் பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் வந்து செல்லும். இயல்பாக இயங்கினால் ஏற்றம் தரும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 15, 16 தேதிகளில் கவனம் தேவை. இராசியான எண்கள் : 1, 5. இராசியான நிறங்கள் : ஆரஞ்சு, மஞ்சள்

**மீனம்** : (பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)



மிதமான செயல்பாடும், தீவிரமான சிந்தனையும் உள்ளவர்களே ! அதிரடி முடிவுகள் எடுப்பீர்கள். வழக்குகளில் வெற்றி உண்டு. வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். மனைவி, மக்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும் . லாட்டரி, ஷேர் லாபம் தரும். ஆன்மீகப் பணி முழுமையடையும். வீடு வாங்குவீர்கள். கட்டுவீர்கள். கணவன், மனைவி உறவு இனிக்கும். குழந்தை பாக்யம் உண்டாகும். பிள்ளைகள் பரிசு, பாராட்டு வாங்குவார்கள். விருந்தினர் எண்ணிக்கை கூடும். கல்யாணம் நடக்கும். வேலை கிடைக்கும். புது நண்பர்கள் கிடைப்பார்கள். சுபக் காரியங்களில் கலந்து கொள்வீர்கள். வெளி வட்டாரம் இனிக்கும். பதவிகள் தேடிவரும். ஆரோக்யம் கூடும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் உயரும். போட்டிகள் குறையும். பங்குதாரர்களிடையே ஒற்றுமை நிலவும். உத்யோகத்தில் உங்களுக்கு மதிப்பு மரியாதை கூடும். புது வேலை கிடைக்கும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகமாகும். மதிப்பெண் கூடும். கன்னிப் பெண்களுக்கு காதல் இனிக்கும். வேலை கிடைக்கும். சாதனைகள் புரியும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 17, 18 தேதிகள் நிதானம் தேவை இராசியான எண்கள் : 3, 9. இராசியான நிறங்கள் : ஊதா, மெரூன்


## ' புதினம் ' வாசியுங்கள் !

இலண்டனில் தொடர்ந்து நீண்ட நாட்கள் வெளிவந்து கொண்டிருக்கும் உயிர்நாடியான பத்திரிகை. மாதம் இருமுறை

சகோதர சஞ்சிகை : **மனம் பேசுது**

மாதமொருமுறை

ஆசிரியர் : ஈ.கே. இராஜகோபால் அவர்கள்


## இதோ ஒரு கேள்வி !

என் வேலை என்னோடுதான். எனக்கு எது பற்றியும் அறியும் ஆர்வம் தேவையில்லை என நினைக்கும் மனிதன் எதையும் சாதிப்பதில்லை. அவன் திறமை அவனுடனேயே முடிந்துவிடும். அறியும் ஆவலுடன் தகவலைத் தேடி அலைபவனே வெளி உலகுக்கு வருகிறான். பல செயல்களுக்கு வித்திடுகிறான். அந்த வித்துகள் வளர்ந்து சமுதாயத்தை வழிநடத்துகின்றன. நிழல் கொடுக்கின்றன. அதுதான் வையத்துள் வாழ்வாங்கு வாழும்முறை

## அப்பாவுக்கு என்ன தெரியும் ?

**தந்தையைப் பற்றி மகன் !**

5 வயது : என் தந்தையால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை.

7 வயது : என் தந்தைக்குப் பல விஷயங்களைப் பற்றி நன்கு தெரியும்.

10 வயது : என் தந்தைக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரியாது.

12 வயது : என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

14 வயது : அவரா? அவருக்குக் காலம் மாறியது எங்கே புரிகிறது?

21 வயது : கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா?

35 வயது : ஏதோ கொஞ்சம் தெரியும்.

40 வயது : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லையே

45 வயது : அவரின் யோசனையைக் கேட்டு பின் முடிவு எடுக்கலாமே.

50 வயது : என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா?

55 வயது : அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்டமாக இருக்கிறது. அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்.

60 வயது : அவரின் அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே?

# மடியின்மை

மலேசியாவில் ஒரு இரப்பர் தோட்டம். அத்தோட்டத்தின் தொழிலாளர் குடியிருப்பில் படிப்பதற்கு ஆர்வமுள்ள ஒரு சிறு பையன் இருந்தான். அவனுடைய அப்பா அந்தத் தோட்டத்தின் லொறிச் சாரதி. அவரது நான்கு பிள்ளைகளில் இவன் மூன்றாமவன். தந்தையின் வருமானம் அந்த ஆறு பேரின் பட்டினியற்ற வாழ்வுக்கு மாத்திரமே போதுமானது. தன் குழந்தைகளின் மேலதிகத் தேவைகட்கு ஈடு கொடுக்கும் நிலையில் அந்தத் தந்தையில்லை. அந்தக் குடியிருப்பின் அருகே ஒரு சிறிய குன்று ஒன்றுண்டு. அந்தக் குன்றின் மேல் ஒரு பருந்து வாசம் செய்தது. அந்தப் பருந்து எழுந்து பறக்கும்விதம், தன் இறக்கைகளை அடித்துக் கொள்ளாமலேயே காற்றில் மிதந்து வந்து அது தரை இறங்கும் லாவகம் ; இவை எல்லாம் அந்தச் சிறுவனை ஈர்த்தன. அதை அவன் நீண்ட நாட்களாக உன்னித்துக் கவனித்து வந்தான். ஒரு நாள் அவன் ; ' அப்பா ! ' இந்தப் பருந்து எப்படித் திடீரென மேலெழுந்து பறக்கிறது? எப்படி அது லாவகமாக இறங்குகிறது, ஏன் நம்மால் அதுபோல் பறக்க முடியவில்லை? '' நமக்குச் சிறகு இருந்தால் ஆனந்தமாகப் பறக்கலாமே ! '' என்று தன் அப்பாவிடம் கேள்வியாகக் கேட்டான். '' அதற்கு இறக்கைகள் இருக்கின்றன. அது காற்றை அமுக்கிக் கொண்டு தன் இறக்கைகளை அடித்து அசைக்கும்போது மேலே எழும்புகிறது. அமைதியாக இறக்கைகளைச் சம நிலையில் வைத்துக் கொண்டு காற்றில் மிதந்து வந்து தரையில் இறங்குகின்றது. அவ்வளவுதான் '' என்று பதில் சொன்னார் அந்த அப்பா, இந்தச் சின்ன மூளைக்கு அது ஏறியதோ என்னவோ, ஆனால் பறக்கவேண்டும் என்ற ஆசை அவனுக்கு வளர்ந்துகொண்டே வந்தது. ஐந்தாம் வகுப்புவரை அந்தத் தோட்ட பாடசாலையில்தான் கல்வி கற்று வந்தான். அதற்கு அப்புறம் அவன் கல்வி தடைப்பட்டது. பட்டினம் போய் படிப்பைத் தொடரும் அவனது ஆசைக்குத் தீனி போட தந்தை தயாரானாலும் அவர் ஏழ்மை இடமளிக்க மறுத்துவிட்டது. அந்தத் தந்தை அதற்காக கண்ணீர்விட்டதுண்டு.

அவன் எப்படியும் படிப்பது என்று வீராப்புக் கொண்டான். அதற்காக அந்தச் சிறிய வயதில் நகரத்தில் இருந்த ஒரு சீனரின் தொழிலகத்தில் எடுபிடி வேலைக்குச் சேர்ந்தான். அங்கு அவன் முழுநாளும் வேலை செய்ய வேண்டி வந்தது. ஏச்சுக்களும், பேச்சுக்களும், அடி உதைகள் என்பனவும் அவனது சம்பளத்துக்கு மேலதிகமாகவே கிடைத்தன. அவன் தந்தை மிகவும் துயரப் படுவார். நான்கு ஆண்டுகள் பாடசாலைப் பக்கம் அவன் போகவேயில்லை. ஆயினும் விடியும்வரை மின்னும் விளக்கொளியில் தொடர்ந்து படித்தான். அவனது உழைப்பு புத்தகங்களாக மலர்ந்தன. அப்பா அவனருகே இருந்து உற்சாகப்படுத்தினார். அது அவனுக்கு எதையும் தாங்கும் இதய பலத்தைக் கொடுத்தது. அந்தக் காலத்தில்தான் ஒரு சிறிய ஒளி அவன் வாழ்வில் ஏற்பட்டது. இன்னொரு சீன இனத்தவர் தனது நிறுவனத்தில் வேலைக்கமர்த்திக் கொண்டார். அந்த மனிதர் சிறிது தாராள மனம் படைத்தவர் என்பதால் அவனது பகுதி நேரப் படிப்புக்கு அனுமதி கிடைத்தது. அவன் அளவிலா ஆனந்தத்தில் மிதந்தான். மிகக் கடுமையாகவும், உண்மையாகவும், பணிவுடனும் உழைத்தான். அதனால் அந்த நிறுவனத்தின் தொழிலாளர்களின் மேலாளனாக உயர்வு பெற்றான். அப்போது அவன் வயது பதினேழு மாத்திரமே. அந்த உழைப்பின் வருமானத்திலும், அந்த முதலாளியின் நல்லெண்ணத்திலும் அவனது அடங்காத ஆசையாக விமான ஆய்வு செய்ய வேண்டுமென்ற உணர்வு மேலோங்கியது. விமானச் செய்முறைகளுக்கான ஆய்வுகளைத் தேடித் தேடி சேர்க்கலானான். ஒரு பஜாஜ் ஸ்கூட்டர் ஒன்றை வாங்கி அதன் என்ஜினை வைத்துக் கொண்டு ஆய்வைத் தொடங்கினான். பலருடைய பரிகாசம், ஏளனம், புறக்கணிப்பு எதையும் அவன் கண்டுகொள்ளவில்லை. அவன் மனத்துள் நிறைந்திருந்தது ஒரு விமானத்தை உருவாக்கிவிடவேண்டுமென்ற எண்ணம் மாத்திரமே. அவன் முதலாளி அவனை உற்சாகப்படுத்தினார். அவன் ஆராய்வுகள் - பலஇரவுகளைக் கடந்து - படித்துக் கொண்டே இருப்பதாகிப் போனது.

அவனது 26வது வயதில் அந்த ஸ்கூட்டர் என்ஜினிலிருந்து உருவான சிறிய விமானம் 600 மீட்டர் தூரம் வரை பறந்து வெற்றிகரமாகத் தரை இறங்கியது. அந்தத் தந்தை தன் தனயனைப் பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டார். அதன் பின் மேலும் ஆய்வுகள் தொடர்ந்தன. இந்த நேரத்தில்தான் தேவதூதனைப் போன்று ஒரு இஸ்லாமியப் பெரியவரின் பார்வை இவன் மீது விழுந்தது. அவர் இவனை அழைத்து உற்சாகப் படுத்தினார். மிகப் பெரும் செல்வந்தரும், நாட்டுப்பற்றாளருமான அந்தப் பெரியவர் அனைத்து நிதி உதவிகளையும் ஏற்றுக் கொண்டார். பெரிய முதலீட்டுடன் இறக்கைகளுடனுமான விமானம் உருவாயிற்று. அந்த விமானம் தன் இறக்கைகளில் நீரையும், மருந்துகளையும் சுமந்து வயல்களில் தெளித்து வெற்றிகரமாக செயற்பட்டது. இன்னொரு புதுமையையும் அவன் கண்டுபிடித்தான். டீசல் எண்ணெயைச் சூடேற்றுவதன் மூலம், முதல்தர சூப்பர் பெற்றோலில் இதுவரை இயங்கிவந்த விமானத்தை டீசல் மூலம் இயக்கிப் பறக்கவிட்டான்.

அதனால் எரிபொருட் செலவீனம் ஏனைய விமானங்களை விட மூன்றில் ஒரு பங்குதான் ஆனது. இது புரட்சிகரமான கண்டுபிடிப்பு. அறிஞர்களும், அரசும் அவனைத் தேடிவந்து கௌரவப்படுத்தினர். '' விமானத்துறை விஞ்ஞானி '' எனப் பட்டமளிக்கப்பட்டது. அப்போது அவன் வயது முப்பத்தைந்து. இன்று மலை முட்டிய தோட்டங்களிலும், சமவெளிகளடர்ந்த நிலங்களிலுமாகப் பல நாடுகளில் பறந்து திரியும் இந்த மலேசியத் தயாரிப்பான விமானங்கள் அந்தத் தமிழ் விஞ்ஞானியின் குழந்தைகள்தான் என்பது பலருக்குத் தெரியாது.


அந்த அற்புதமான எளிமையான மனிதர் அண்மையில் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தார். அவரைக் காணப் பெரிய கூட்டமே முண்டியடித்தது. அங்கு அவர் அளித்த பேட்டி பலருக்கு வாழ்வின் முன் மாதிரியாக அமைந்திருந்தது. ஒரு முக்கியமான கட்டம்; அவருக்கு வழிசமைத்த அந்த இஸ்லாமியப் பெரியவர் எக்காரணங் கொண்டும் தனது பெயரை வெளியிட்டுவிட வேண்டாமெனக் கேட்டுக் கொண்டாராம். அதைக் கூறிக்கொண்டே அந்த விஞ்ஞானி தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டபோது, ஒரு நன்றியுள்ள இதயத்தின் வழிபாட்டையே காண முடிந்தது. இன்னொரு வாக்குறுதியையும் அந்தப் பெரியவர் இவரிடமிருந்து பெற்றுக் கொண்டாராம். அது, '' நீ என்றும் தமிழனாகவே வாழவேண்டும், '' என்பதுதானாம். இதைச் சொல்லும்போது மீண்டும் விம்மினார் அந்த விஞ்ஞானி.

தன் பேட்டி முழுதும் பிறமொழிக் கலப்பின்றி அழகு தமிழிலேயே அவர் பேசினார். '' நான் தமிழனாக - சைவனாக வாழவே ஆசைப்படுகிறேன். அதுதான் அந்த இஸ்லாமியப் பெரியவருக்கு என்னால் முடிந்த கைம்மாறு '' என்று முடித்தார். அந்த எளிமையான, எதிர்நீச்சலான வாழ்வில் இமயமாக உயர்ந்து நிற்கும் அவர் திரு. சாம்பசிவம் அவர்கள். மலேசியா நாட்டின் விமானத்துறை விஞ்ஞானி. உலகத் தமிழனின் தலைநிமிர்வுக்கு உரித்தாளரான அந்த விஞ்ஞானியின் வாழ்வு சிறக்க வேண்டும். இதோ வள்ளுவர்

'' மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர் '' (குறள் 602)

**– கோத்திரன்**

# வர்ணஜாலம் எங்கே!



மதுரன் மைலன் மிதுன்

அடுத்த இதழில்...



கனடா வல்மொரின் முருகன் கோவில்
தேர்த் திருவிழாவின்போது அடியாரின் பறவைக் காவடியும்,
அந்தக்கோவிலில் திறந்த வெளியில் அமைந்திருக்கும் சிவலிங்கமும்


இந்தப் பக்கத்துக்கு ஆதரவு நல்கியவர்

MITHUS JEWELLERY

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792



DIAMONDS PALACE

76 Tooting High Street
London SW17 ORN
Tel : 020 8767 5333
Fax : 020 8767 5814